தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2014 சுறவம் 17 (30 - 1 - 1983) விலை 65 காசு — இதழ் எண்: 11 | பகுதி 13

★ கன்னியாகுமரி மாவட்டத்தில் 500 இந்துக் கோயில்களைப் பிர்லா கட்டித் தருகிறார்!

★ 5000 பேர் சமசுக்கிருதப் பயிற்சி பெறுகிறார்கள்!

★ ஆர். எசு. எசு., விசுவ இந்து பரீட்சத் இவற்றின் செயல்திட்டங்கள்!

★ சமசுக்கிருத வளர்ச்சி, இந்துமதப் பரப்புதல்-இரண்டுமே அவர்கள் கொள்கை!

★ தமிழர்களுக்குத் தமிழ்மொழி வளர்ச்சி, தமிழின முன்னேற்றம் பற்றி அக்கறை வரவேண்டும்!

★ செல்வர்கள் அதற்குத் துணை நிற்கவேண்டும்!

★ சென்ற இதழ் முகப்புச் செய்தியின் மேல் விளக்கங்கள்!

பார்ப்பனீயத்திற்கும் பிற இந்துமதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் முழுக்கவலை என்னென்றால், இந்தியாவில் முசுலீம் மதத்தையும், கிறித்துவ மதத்தையும் வேரில்லாமல் செய்து விட வேண்டும் என்பதுதான். இரண்டும் இந்தியாவிற்குச் சொந்தமில்லாத வேற்று நாட்டு மதங்கள் என்பது அவர்கள் கருத்து. இந்து என்னும் பார்ப்பனீய மதம் ஒன்று மட்டுமே இந்நாட்டுக்குரிய உள்நாட்டு மதமாம். எனவே, இந்துமதம் பற்றிய அனைத்து முயற்சிகளையும் ஒருபுற முயற்சியாகவும், அதற்குத் துணையான சமசுக்கிருத வளர்ச்சியை ஓர் அக முயற்சியாகவும் அவர்கள் ஒரே பொழுது செய்து வருகிறார்கள். சமசுக்கிருதத்தைத் தவிர்த்து இந்துமதத்தை நிலைப்படுத்துதல் இயலாது. இந்து மதத்தின் உயிரே சமசுக்கிருதத்தில் தான் இருக்கிறது.

சமசுக்கிருதத்தை அவர்கள் தேவமொழி என்று சொல்வது நிலைபெற்ற கருத்தாக இருந்தால் தான், ஆரியப் பார்ப்பனர்களும் தங்களைத் தேவர்கள் என்று கூறிக் கொள்ள முடியும். அவர்கள் தேவர்கள் அல்லது பூதேவர்கள் என்பது நிலைப்பாடு பெற்றால்தான் இந்து மதத்திற்குக் காவலர்களாகவும் அதிகாரிகளாகவும் அவர்கள் இருக்க முடியும். அப்பொழுதுதான் இந்து மதமும் இந்நாட்டில் நிலையாக இருக்க முடியும். இதைக்கீழ் வரும் ஒரு பழைய சமசுக்கிருதச் சொலவகம் (சூத்ரம்) நன்றாக எடுத்துக்காட்டுகிறது.

'தெய்வா தீனம் ஜத் ஸர்வம்
மந்த்ரா தீனந்து தைவதம்
தன் மந்த்ரம் ப்ராஹ்மணா தீனம்
ப்ராஹ்மணா மம தைவதம்'

(இதன் பொருள்: உலகம் தெய்வத்தின் ஆளுமையுள் (ஆதிக்கத்தில்) உள்ளது; தெய்வம் மந்திரத்தின் ஆளுமையுள் இருக்கிறது; அந்த மந்திரம் பிராமணர்களின் ஆளுமையுள் இருக்கிறது; எனவே, பிராமணரே நம் தெய்வம்.) ஆகவே, இந்து மத வளர்ச்சிக்குச் சமசுக்கிருதமே அடிப்படையாக இருக்கிறது. சமசுக்கிருதமோ பிராமணர்களுக்குத் தேவையான இந்துமத மூலப்பொருளாக இருக்கிறது. இந்நிலையில் இந்தியா அஃதாவது பாரத நாடு சமசுக்கிருதத்தையும், சமசுக்கிருதம் பிராமணர்களையும் தவிர்த்து வாழ முடியாது! சமசுக்கிருதம் தவிர்க்கப்பட்டால் பிராமணீயமும் தகர்ந்து போகும். இந்தக் கருத்துகளை உள்ளடக்கி நாம் இப்படியொரு சொலவகத்தைப் புதியதாக அமைக்கலாம்.

'ப்ராஹ்மணா தீனம் சமஸ்கிருதம்:
சம்ஸ்கிருதா தீனந்து ஹிந்துமதம்:
தன்மதம் ப்ராஹ்மணா தீனம்:
ப்ராஹ்மணா மம பாரதம்.'

எனவே தான் சமசுக்கிருத வளர்ச்சியில் பார்ப்பனீயம் அவ்வளவு அக்கறை கொள்கிறது.

இந்தியாவைப் பார்ப்பனீயம் தன் ஆளுமைக்கு உரிய நிலமாக நிலைபடுத்திக் கொள்ள வேண்டுமானால், இந்துமதத்தை அது நிலைப்படுத்திக் கொள்ளவேண்டும். இந்துமதம் இந்தியாவை விட்டு உலக நாடுகள் எதிலும் கால்கொள்ள முடியாது. ஏனெனில் அஃது அறிவியலுக்கு மாறுபட்ட ஒரு மதம். எனவே அறிவியலுக்கு மாறுபட்ட, மூடநம்பிக்கைகளையே அடிப்படையாகக் கொண்ட, ஓரினம் மட்டுமே பிழைப்பதற்குக் கருவியாக உள்ள இந்துமதம், இந்தியாவில் நிலைப்பட வேண்டுமானால், அஃது இரண்டு அடிப்படையான வேலைகளைச் செய்து கொள்ள வேண்டும். ஒன்று, அம்மதக் கருத்துகளுக்கு அடிப்படையான சமசுக்கிருத மொழியை அது வளரச் செய்ய வேண்டும்; அல்லது மறைந்துபோகாமல் காத்துக் கொள்ள வேண்டும். இரண்டு, இந்து மதக் கொள்கைகளை அடியோடு ஒழித்துக் கட்ட வல்லனவும், மக்களைச் சமமாக மதிக்கின்ற கொள்கைகள் கொண்டனவுமான, அஃதாவது வருணாசிரமத்திற்கு மாறுபட்டனவுமான

(3-ஆம் பக்கம் பார்க்க)

[illegible]

★ எங்களுடைய நிலத்திலே, எங்களுடைய உரிமை நிலைநாட்டப் பெறுதல் வேண்டும்!

★ மக்கள் இனத்தில், ஓரினம் தனிச் சிறப்பு எய்துதல் தவிர்க்கப் பெறுதல் வேண்டும்!

★ மூவாயிரம் ஆண்டுகளாக ஓரினத்திற்குத் தமிழினம் அடிமைப்பட்டுக் கிடப்பதா?

★ எத்தனைக் கட்சிகள் தோன்றியிருந்தாலும் இதுவரை மக்களுக்கு அறிவூட்டுகிற முயற்சி நடைபெறவில்லை!

★ நம் முன்னைப் புலவர்கள் எல்லாரும் அடிமைகளே!

மீண்டும் மீண்டும் நாம் அடிமையாகிக் கொண்டே கிடப்பதா?

★ 'தமிழ் நிலம்' வெளியீட்டு விழாவில் பாவலரேறு உரையின் 7-ஆம் தொடர்!

எங்களுடைய நிலத்திலே, எங்களுடைய உரிமை என்பது நிலைநாட்டப் பெற்றால், நாங்கள் சில நன்மைகளைப் பெற முடியும்! எங்களிடத்திலே இருக்கிற பிரிவினைகளை ஒழித்துக் கொள்ள முடியும். எங்களிடத்திலே இருக்கிற வேறுபாடுகளைத் தகர்த்துக் கொள்ள முடியும்! எங்களிடத்திலே இருக்கிற இழிவுகளை நாங்கள் போக்கிக் கொள்ள முடியும்! அதற்காகத் தான் கேட்கிறோம்! நீ, அதுபோல் அன்று! மக்களைப் பிரிவினை செய்கின்றவர்களை விட்டுவிடுகிறாய்! அவன் தான் உண்மையிலேயே இந்த நாட்டிலே பிரிவினைக்காரன்! அவனைத் தான் நீ நினைக்கிற சட்டத்திற்குக் உட்படுத்திக் குற்றவாளியாக்கி ஓர் ஏழாண்டுச் சிறை கொடுக்க வேண்டும். ஏனென்றால் அவன் மககளை வேறுபடுத்துகின்றான்! நாங்கள் எல்லாம மக்களை ஒற்றுமைப் படுத்துகின்றோம். யாராயிருந்தாலும் சரி; உன்னையும் சேர்த்து! நீ கூட வந்தால் வா! எங்களோடு வருகிற பொழுது, ஏதாவது உன்னுடைய சிறப்பை நினைத்து ஏதாவது செய்கிறோம். இப்பொழுது அப்படித் தானே நாம் பாராட்டிக் கொண்டிருந்தோம். கடந்த காலத்திலே நூற்றுக்கு தொண்ணூற்றுஏழு பேராக இருந்த நாம், நூற்றுக்கு மூன்று பேராக இருக்கிறவனை, இன்றைக்கு வரைக்கும் பாராட்டிக் கொண்டிருக்கிறோம் என்றால், எதற்காகப் பாராட்டிக் கொண்டு இருக்கிறோம்? யாராவது இல்லையென்று சொல்லிவிட முடியுமா? எத்தனைப் பேருக்கு நம் ஆள்கள் போய் பிட்டணைகவும பல நிலைகளிலும் அடிமைகளாக இருக்கின்றார்கள்! பின்னே அவனாகவா முன்னேறிவிட்டான்? நூற்றுக்கு மூன்று பேராக இருக்கிறவன் (ஓர் இனத்தவன்) அவனாக முன்னேறிவிட முடியுமா? எல்லாரையும் அடிமைப்படுத்த முடியுமா? எத்தனை ஆண்டுக் காலம்! ஒரு நூறு ஆண்டுக் காலமா? இரு நூறு ஆண்டுக் காலமா? ஆயிரக்கணக்கான ஆண்டு! ஏறத்தாழ மூவாயிரத்தைந் நூறு, நாலாயிரம் ஆண்டுகள், இந்த நாட்டிலே நூற்றுக்கு மூன்று பேராக இருக்கிறவன் 97 பேராக இருக்கிறவனைத் தாழ்த்திக்கொண்டு, அடிமைப்படுத்திக் கொண்டு, ஏமாற்றிக் கொண்டிருக்கிறான் என்று சொன்னால், என்னைப் பொறுத்தவரை அவனுடைய குற்றத்தைவிட, அவனுடைய செயற்பாட்டை விட நம்முடைய செயற்பாடுகள்தாம் தவறாக இருக்கின்றன! யாராவது இந்த இனத்திற்கு அறிவூட்டினார்களா? அதைப் பார்த்தீர்களா நீங்கள்! எண்ணிப் பார்க்க வேண்டும். மக்களுக்கு அறிவூட்டுகிற முயற்சி நடைபெறவில்லை! பெரியார் ஒருவர் தான் அறிவூட்டினார்! மற்றவர்களெல்லாம் கட்சி பிரித்தார்கள்! மதம் பிரித்தார்கள்! சாதி பிரித்தார்கள்! அவர்களிடத்திலே எப்படிச் சாதியைப் புகுத்தி, சாதி உணர்ச்சியை ஊட்டி, நீ இன்னசாதிக்காரன் நம்ம சாதி நீ. வா நம் பக்கம் என்று கூப்பிட்டார்கள்! நீ இன்ன மதத்துக்காரன் வா நாம் இரண்டு பேரும் சேர்ந்து சாமியைத் தூக்கலாம் என்று சொன்னார்கள். இப்படித் தானே ஒருவருக்கு ஒருவர் ஏதோ ஒரு மூடநம்பிக்கை அடிப்படையிலே இனம் இனமாகப் பிரிந்து கிடந்தார்கள். மக்களுக்கு உண்மையாக அறிவூட்டவில்லை. உண்டாக்க நினைத்தது. விரும்பியது யார்? அதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். புலவர்களா? கழகக் காலத்திற்குப் பின்னாலே இருந்த புலவர்களெல்லாம் அடிமைப் புலவர்கள்! (கைத்தட்டல்) ஒரு புலவனும் உண்மையான உரிமைப் புலவனாக நம் கண்ணுக்குப்படவில்லை! யாராவது சொல்ல முடியுமா? ஏதோ ஒரு வகையிலே, அடிமைப்பட்டிருந்தான்! இந்த இனத்தைக் காட்டிக்கொடுத்திருந்தான். கம்பன்! பெரிய கம்பன்! பெரிய கொப்பன்! இலக்கியத்திலே மிகச் சிறந்தவன், என்று நாம் நினைக்கிறோம். உண்மைதான்! இந்த இனத்தை நூற்றாண்டு நூற்றாண்டாய், ஆயிரம் ஆண்டுகளாக அடிமைப்படச் செய்து விட்டானே! அந்த ஒரு கதை இந்த நாட்டிலே தோன்றியிருக்கவில்லையானால் கம்பராமாயணம் என்ற ஒரே ஒரு நூல் தோன்றியிருக்கவில்லையானால், இந்த இனம் கொஞ்சம். ஓர் ஐந்நூறு ஆண்டுகள் முந்தியே விழிப்படைந்திருக்குமே! (கைத்தட்டல்) காலங்காலமாக, காலங்காலமாக அடிமைப்படுத்தி அடிமைப்படுத்தி, ஒரு குரங்கினமாகவே நம்மை ஆக்கிவிட்டார்களே!

குரங்கினம் என்றால் தமிழர்கள் தான்! வேறு யாருமில்லை! அப்படித்தானே தெளிவாய் வெளிப்படையாய் எழுதினார்கள்! இப்படிப்பட்ட அடிமை இனமாகச் செய்ததற்குக் காரணியம் பலவகையான ஆரிய அடிமைகள் தாம்! அந்த நிலையிலே எல்லாவற்றையும் தூக்கி உதறித் தள்ளிவிட்டு எத்தனை வகையான அறிவாளிகள் இருந்தாலும் அவன் பேச்சைக் கேட்காமல், மீண்டும் மீண்டும் அடிமைகளாகவே போய்க் கொண்டிருக்கிறோமா, இல்லையா? சிந்தியுங்கள்! **நம் உரிமைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்! நாம் முதலிலே அறிவு உரிமை பெறவேண்டும்! அடுத்து சிந்தனை உரிமை பெற வேண்டும்! அப்புறம், செயல் உரிமை பெற வேண்டும்! பிறகு, இன உரிமை பெறவேண்டும்! பிறகு பொருள் உரிமை பெறவேண்டும்! பிறகு நாட்டுரிமை பெற வேண்டும்!**

அந்த நிலையிலே, பல திராவிட இயக்கங்கள், நம்முடைய ஐயா (அப்பாத்துரையார்) அவர்கள் சொன்னது போல இருக்கின்றன! அவர்கள் வரலாறு தெரிந்தவர்கள்! சிறந்த பன்மொழிப் புலவர்கள்! ஆனால், அவர்களை யார் கவனித்தது? ஒருவரும் கவனிக்கவில்லையே! பாவாணரை யார் கவனித்தது? ஒருவரும் கவனிக்கவில்லையே! நாங்கள் எல்லோரும் பாடுபட்டு, அவருடைய அறிவைத் தெரிந்து கொண்டு. அவருடைய அறிவு இந்த மொழிக்குக் கிடைக்க வேண்டும்! அந்தத் தமிழ், ஆரியத்திலிருந்து விடுபட வேண்டும் என்கின்ற முயற்சியிலே. ஓர் உண்மையான நிலையிலே, அவர்களுக்குப் பலவகையான நிலைகளிலே துணை நின்றதனாலே, சில முயற்சிகளைச் செய்தார்கள்! அவ்வளவு தான்! முழுவதும் செய்ய முடியவில்லை. ஏனென்றால், மிகக் காலங் கடந்து அவர்க்குத் துணை போனது! அதாவது, கப்பல் முக்கால் பங்கு, முக்காலே மூன்று வீசம் பங்கு முழுகிப் போன பின்னாலே உதவிக்குப் போவதுபோல அரசு வந்தது. உதவி, செய்யச் செய்ய முழுகி விட்டது. அவ்வளவுதான! உண்மை அதுதானே! (இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும் பொழுது திரு. அப்பாத்துரையார் அவர்கள் எழுந்து ஒருவரைத் துணைக்கழைத்துக் கொண்டு. மிகவும் தொல்லைப்பட்டுத் தட்டுத் தடுமாறி நடந்து கழிவறைப் பக்கம் சென்றார்கள். அதைத் தம் பேச்சிற்கிடையில் சுட்டிக் காட்டிப் பாவலரேறு மேலும் பேசியதாவது)

அதேபோல, நீங்கள் இப்பொழுது அவர் எழுந்து போனபோது பார்த்தீர்கள்! எவ்வளவு துன்பப்பட்டு நடக்கிறார்கள்! இவர்களுடைய அகவையிலே, எந்த வடநாட்டுக்காரனாவது, இது போல நடக்கிறதை, செல்லையிலே நீங்கள் பார்த்திருக்கவே முடியாது! நல்ல, கொழுகொழுகொழுவென்று தக்காளிப்பழம்போல, உட்கார்ந்து சாய்ந்துகொண்டு திண்டிலே, வருகிறவர்களுக்கெல்லாம், வட்டிப்பணத்தை எண்ணிக்கொண்டு. பெட்டியிலே போட்டுக்கொண்டு, அந்த வடநாட்டுக்காரர்களை வாழவைக்கிறவர்கள்தானே, இங்கு மிகுதியாக இருக்கிறார்கள்! இதை. நாம் உண்மையாகக் கவனிக்க வேண்டும்!

—(தொடரும்)

நாங்கள் பிரிவினைக்காரர்களே!

சமற்கிருத மொழிக்கலப்பிலிருந்து தமிழைப் பிரித்து அதன் தனித்தன்மையினைக் காப்பாற்ற வேண்டியும், ஆரிய நாகரிகத்திற்கு அடிமைப்பட்டு உள்ள தொன்மை நாகரிகமான தமிழ நாகரிகத்தின் தனித்தன்மையினைக் காப்பாற்றவும், தனது தனித்த ஆண்மைக் குணத்தை இழந்துவிட்ட தமிழனின் ஆளுமைக் குணத்தை மீட்கவும், பார்ப்பனீயம் என்ற 'அக்டோபசின்' கடுமை பிடியினின்றும் தமிழனைத் — தமிழைத் — தமிழ் நாட்டை மீட்க எந்த வகையான ஈகத்திற்கும் அணியமான நிலையினில் உள்ள உறுதியுடன் செயல்பட்டு வரும் எங்களைப் பிரிவினைக்காரர்கள் என யாராவது கூறுவார்களேயானால், நாங்கள் பிரிவினைக்காரர்களே!

— தென்னவன்

சென்னை நகருக்கு விற்பனையாளர் தேவை!

வடசென்னை, தென்சென்னைப் பகுதிகளுக்குத் தனித் தனியாகத் "தமிழ் நிலம்" செய்தியிதழை ஆங்காங்குள்ள கடைகளில் விற்பனைக்குப் போட்டுத் தங்களுடைய முழுப்பொறுப்பில் விற்பனை செய்யும் தகுதியுடைய, முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை. அன்பு கூர்ந்து நேரிடையாகத் தொடர்பு கொள்ளவும்.

அமைச்சர்
"தமிழ் நிலம்"

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 | 30-1-83 — இதழ் எண்: 11 | பகுதி 13

தமிழக அரசும், இந்தி எதிர்ப்பும்!

தமிழக அரசின் சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கின்றது. அதில் ஆளுநர் பேசிய பேச்சின் அடிப்படையில், மன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை எடுத்துக் கூறிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு விடை தருகின்ற வகையில் முதலமைச்சர் ம. கோ. இரா. அவர்கள் இந்தியெதிர்ப்பைப் பற்றித் தீவிரமான சில கருத்துகளைக் கூறியிருக்கிறார். அவரின் மழுங்கிவிடாத இந்தியெதிர்ப்புக் கருத்துகளைப் பாராட்டுகிறோம். ஆனால், அதே சமயத்தில் நடுவணரசு செய்யும் இந்தித்திணிப்பு முயற்சிகளையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தமிழகத்தில் இந்தியெதிர்ப்புணர்வு இன்று நேற்று தோன்றியதன்று. ஏறத்தாழ 47 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து வருகின்றது. இங்குள்ள தலைவர்களும், பொதுமக்களும், மாணவர்களும், பொதுநிலைச் செல்வர்களும் இந்தியெதிர்ப்புக் கருத்துகளை அவ்வப்பொழுது தொடர்ந்து வெளிப்படுத்தியே வந்திருக்கின்றனர்; வருகின்றனர். பல மாநாடுகள், பல எதிர்ப்புக் கூட்டங்கள் போட்டும், தீர்மானங்கள் பல நிறைவேற்றி அனுப்பியும் வந்திருக்கின்றோம். ஆனால் இன்றுவரை இந்தித் திணிப்பு முயற்சி துளியும் குறைந்துவிடவில்லை என்பதை நாம் திட்டவட்டமாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

இன்றும் இந்தித்திணிப்பு பலவகையில் நடந்துகொண்டுதான் உள்ளது. தலைமையமைச்சர் இந்திரா காந்தியும், பொறுப்புள்ள பிற அமைச்சர்கள் சிலரும், இந்தித்திணிப்பு இல்லை என்று சொன்னாலும், மறைமுகமாக இந்தி நுழைக்கப்பட்டுத்தான் வருகிறது என்பதை நாம் மறந்துவிடுதற்கு இல்லை. வானொலி, தொலைக்காட்சி, நடுவணரசு அலுவலகங்கள், பள்ளிக்கூடங்கள், பொதுத்துறைகள் இவற்றிலெல்லாம் இந்தி மேலும் மேலும் திணிக்கப்படுவது, தமிழக அரசு உணராத ஒன்றன்று.

எனவே, தமிழக அரசு திட்டவட்டமாக இந்தித் திணிப்பு முயற்சியைக் கண்டிக்கின்ற வகையிலும், அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்கின்ற வகையிலும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி நடுவணரசுக்குத் திட்டவட்டமான தன் கருத்தை அதிகார முறையில் அறிவித்துவிட வேண்டும். முடிந்தால் போராடவும் வேண்டும். தமிழக முதல்வரும் அவரைச் சார்ந்த அமைச்சர்களும் வெளிப்படையாக இதைச் செய்வார்களா? செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

“செந்தமிழ்ச் செல்வர்” திரு. சுப்பையா அவர்களின் மறைவு குறித்து இரங்கல்

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தலைவரும், தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றியவரும் ஆகிய தமிழறிஞர், “செந்தமிழ்ச் செல்வர்” திரு. சுப்பையா அவர்கள், கடந்த சனவரி 24-ஆம் நாள் பிற்பகலில் மறைவெய்தியமை தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு மிகப் பெரிய இழப்பாகும். அறுபது ஆண்டுக் காலமாகப் பன்னூற்றுக் கணக்கான செந்தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிட்ட வகையில் தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றிய அப் பெருமகனாரின் மறைவுக்குத் “தமிழ் நிலம்” தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

உலகெங்கும் பண்டைத் தமிழிலக்கியங்கள் பரவுவதற்கு அவரின் நூல் வெளியீட்டுத் தொண்டு மிக மிகப் பயன் தந்தது. நடுவண் அரசின் தாமரைச் செல்வர் (பத்மசிறி) பட்டமும் பெற்றவர் அவர்.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு ஆசிரியரும் நம் தமிழ் நிலத்தின் சிறப்பாசிரியருமாகிய பாவலரேறு ஐயா அவர்கள், திரு. சுப்பையா அவர்களின் சிறப்பும் பெருமையும் மதிப்பும் குறித்து வழங்கிய சில குறிப்புகள் இங்கு நினைவு கூரத்தக்கனவாகும்.

[திரு. வ. சுப்பையா அவர்களின் பவளவிழா மலரில். 1973]

திரு சுப்பையா அவர்களுக்கென்றே சில தனித் திறன்கள் உண்டு. அறிஞர்களிடம் அவர் பழகும் முறை, அவர்களைக் கண்டவிடத்துக் கனிய உரையாடி அவர்களை விருந்தோம்புகின்ற பெரும் பண்பு, அவர்களின் அறிவு வெளிப்பாட்டிற்கு அவர் துணை நின்றுதவும் பாங்கு, அவர்களின் அறிவு நுட்பத்தை உணர்ந்து கொண்டு, அவர்களை முறையாக ஈடுபட வைத்துத் தமிழுக்கு அவர்களின் அறிவு பயன்பெறும்படிச் செய்யும் உணர்வுத் திறன், எவ்வெத் துறையில் தமிழ்மொழி தொய்ந்து கிடக்கின்றதோ அவ்வத் துறையில் ஈடுபட்டு உழைக்கும் அறிவாற்றல், எத்திறத்தாரையும் அன்பாலும் அனுகூலத்தாலும் கவர்ந்திழுக்கும் பேச்சாற்றல், அறிஞர்களின் மடல்களையும் கையெழுத்துப் படிகளையும் படங்களையும் வரலாற்றுக் குறிப்புகளையும் பெறற்கரும் பெருங்களஞ்சியமாகக் கருதிப் பேணிக் காக்கும் திறன், துவளாத நெஞ்சு, தூங்காத உணர்வு, துயர்களுக்கு அஞ்சாமல் ஈடு கொடுக்கும் வலிய வினையாற்றல், அயராத உழைப்பு—இன்ன பிற திரு. சுப்பையா அவர்களின் தனியாளுமைத் திறன்களாகும்’.

“கடந்த ஐம்பது ஆண்டுகளாக உள்ளமும் உடலும் சலியாமல் தமிழுக்கும் சமயத்திற்கும் அவராற்றிய தொண்டு தமிழகத்தின் உழைப்பு வரலாற்றுக்கே ஒரு புதிய திருப்பமாகும். அதன் அறிவு வரலாற்றுக்கே ஓர் உணர்வெழுச்சிக் காலமாகும்.”

(கழகப் பொன்விழா மலரில், கழக ஆற்றுப்படை என்னுந் தலைப்பின் கீழ் யாத்தளித்த பாவில் ஒரு பகுதி. [1970]

சுப்பையா வெனுமோ ரொப்பிலா மாமணி
முப்பொழு துந்தமிழ் முன்னேற் றத்தினை
விழைந்து நாடி வியத்தகு துறைபல
நுழைந்து புதுப்புது நூற்களாய்ப் பதித்தலை
எண்ணிய நெஞ்சம் இறும்பூ தெய்தும்!
பண்ணிலும் பாவிலும் பராவிக் களித்திடும்!
நுண்ணிய வினைத்திறம் நூலறி வுறுதிறம்
திண்ணிய மனவுரந் தேங்கியோ னவனே!

அப் பெருமகனாரின் ஈடுசெய்யவியலாத இழப்புக் குறித்து நெஞ்சு கலங்கிப் பெருந்துயர் உறுகின்ற, அவரின் இல்லத்தாருக்கும், உறவினர்க்கும், அவரோடு துணைநின்று உழைத்த தொடர்புடைய அறிஞர்கட்கும், “தமிழ் நிலம்” தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கிறித்தவம், இசுலாமியம் போன்ற புறமதங்கள் இந்தியாவில் பரவுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இந்த இரண்டு கொள்கைகளும் அவற்றை நோக்கிய செயற்பாடுகளும் வலிந்த முறையில் பரவினால் தான், பிராமணீயம் அஃதாவது ஆரியப் பார்ப்பனீயம் இந்த நாட்டை முழுவதுமாகக் கவர்ந்து (ஆக்ரமித்துக்)கொள்ள முடியும். எனவே, அத்தகைய முயற்சிகளைத்தாம் பார்ப்பனீய இயக்கங்கள் அனைத்தும். குறிப்பாக ஆர். எசு. எசு.ம், விசுவ இந்து பரிசத்தும், அரவிந்த ஆசிரமத்துப் பணத்தை வைத்துக் கொண்டு செய்ய முயற்சி செய்கின்றன.

அரவிந்த ஆசிரமம் சமசுக்கிருதத்தை உலகமொழியாக்குவதற்கு ஒதுக்கிய 800 கோடி உருபாவுக்கு மேலும் அவ்வியக்கங்கள் ஆரியத்திற்குத் துணையான செல்வர்களிடமிருந்து நிறையப் பணத்தைத் திரட்டத் திட்டமிட்டிருக்கின்றன. அந்த வகையில் ஒவ்வொரு நாளும் இலக்கக் கணக்கான பணம் திரளுகிறது. குறிப்பாக, பார்ப்பனீய அடிமைகளாக உள்ள முத்தையா மகாலிங்கங்கள் போன்ற தமிழினச் செல்வர்களே, இந்து மதத்தின் மேலும் சமசுக்கிருதத்தின் மேலும் கொண்ட அறியாமை வெறியினால், அவர்களின் முயற்சிக்குத் துணைபோவது, அவர்களுக்குப் பெரிய ஆக்கமாக இருக்கிறது.

“நம் தமிழக அரசும், பார்ப்பனர் மனம் புண்படக் கூடாதே என்ற வகையில், அவர்களின் முயற்சிக்கு, நேரடியாகவும் மறைமுகமாகவும் துணைபோவது தெரிய வருகிறது. எடுத்துக் காட்டாக, ஆர். எசு. எசின் முயற்சியால் வடநாட்டுப் பண முதலையாகிய பிர்லா மட்டும் தம் பணத்தில், மதமாற்றங்கள் பெரிதாக நிகழும் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும், 500 இந்து மதக் கோவில்களைக் கட்டித் தர ஒப்புக் கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இவரன்றி டாட்டாவும் இப் பார்ப்பனீய முயற்சிகளுக்குத் துணைபோக முன் வந்திருப்பதாகவும் தெரிய வருகிறது. இன்னும், செட்டிநாட்டிலும் உள்ள பெரிய பெரிய பார்ப்பன நிறுவனங்களும், ‘சற்சூத்திர’ நிறுவனங்களும் இவ்வகையில் அவர்களின் முயற்சிகளுக்குதவ முன்வந்திருப்பதாகத் தெரிய வந்திருக்கிறது. போதிய வரலாற்றறிவில்லாமலும், தமிழினப் பற்றில்லாமலும், நம் தமிழினப் பணக்காரக் கொள்ளையர்களும், தமிழக அமைச்சர்கள் அதிகாரிகளும் இப்படித் துணை போகலாம் என்று கருதுகிறோம்.

இனி, ஆர். எசு. எசும், விசுவ இந்து பரிசத்தும் வகுத்துள்ள திட்டங்களையும் நாம் கவனித்தல் வேண்டும். முதல் கட்டமாக, இந்தியாவில், சில தகுதிகள் அடிப்படையில் மாவட்டத்திற்கு இருவர் பேர் 1000 பேர்களைக் கட்டுப்பாடுமிக்க முழுநேரத் தொண்டர்களாகப் பொறுக்கியெடுக்க அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 500 உருபா மேனி சம்பளம் கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முறையான ஆறுமாதப் பயிற்சியைத், தென்னிந்தியாவில் சிரீசைலத்திலும், வட இந்தியாவில் காசி, ரிசிகேசம் கோரக்பூர் (சிறி சைதன்யர் பிறந்த இடம்) ஆகியவற்றிலும் கொடுக்க விருக்கிறார்களாம். மாவட்டத்திற்கு இருவராகப் பொறுக்கப்பட்டவருள், ஒருவர்க்கு, மதமாற்றங்கள் நிகழ்கின்ற இடத்திற்குச் சென்று, அங்குள்ள மக்களில், முசுலீம், கிறித்தவ மதங்களுக்குச் செல்ல விரும்புவர்களோடு, நேரடியாகத் தொடர்பு கொண்டு. அவர்களை அம் மதங்களுக்குச் செல்லவிடாமல் எவ்வகையிலாவும் தடுப்பதும், இந்து மதத்திலேயே இருக்கச் செய்வதும் என்ற முறையில் பயிற்சி தருவார்களாம். பயிற்சி பெற்ற ஆயிரத்துள் 500 பேர் இந்த முயற்சியைச் செய்கையில், மீதமுள்ள 500 பேர்கள், ஏற்கனவே முசுலீம், கிறித்துவ மதங்களில் உள்ளவர்களை இந்து மதத்திற்கு மாறச் செய்யும் முயற்சியில் ஈடுபடுவார்கள். இந்த வகையில் இவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். அதுவன்றி, பிர்லாவின் முயற்சியில் கன்னியாகுமரி மாவட்டத்தில், கட்டப்பெறவிருக்கும் 500 கோவில்களிலும், முழுக்கமுழுக்கப் பார்ப்பனப் பூசாரிகளை (அருச்சகர்)களையே அமர்த்துதலும் அவர்களின் திட்டமாகும்.

இதற்கடுத்து, இரண்டாவது கட்டமாக நாடு முழுவதும் 5000 பேர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு முறையான சமசுக்கிருத மொழிப் பயிற்சி கொடுத்து, அவர்களைக் கொண்டு உலக முழுவதும் சமசுக்கிருதப் பள்ளிகளைத் தோற்றுவிப்பது அவர்கள் திட்டமாகும். இவ்விரண்டு திட்டங்களும் 1983 இறுதிக்குள் செயற்படுத்தப் பெறுதல் வேண்டும் என்னும் பெருமுயற்சியில் அவர்கள் முனைந்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த நிலையில், தமிழர்கள் ஒன்றை ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பார்ப்பனர்கள், அவர்களின் மொழி வளர்ச்சிக்கும் இன முன்னேற்றத்திற்கும் திட்டமிட்டுச் செயற்படுவதும், பணம் திரட்டுவதும் நமக்கு எரிச்சலையும், கொதிப்பையும் ஏற்படுத்துவதைவிட, ஓர் உண்மையை உணர்த்துகிறது. அவர்கள் இனத்திற்கு அவர்கள் பாடுபடுவதில் தவறென்ன? ஆனால், நாம் எப்படியிருக்கிறோம்? நம்மிடம் தமிழ்ப் பற்று உண்டா? தமிழ் வளர்ச்சிக்கான திட்டம் உண்டா? நம்மிடத்தில் உள்ள செல்வர்கள் நாம் அந்த முயற்சியை செய்வதற்கு உதவுகிறார்களா? நம் தலைவர்களும் இவற்றைப் பற்றிக் கவலை கொள்கிறார்களா? சிந்திக்க வேண்டும், நாம்! ○

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பிப்ரவரி மாதச் சுற்றுச் செலவுத் திட்டம்!

6—2—83	திருச்சி. (திருமணம்) கருணாநிதி—பொற்சிலம்பி
7—2—83	திருச்சி. சுழற்கழக நிகழ்ச்சி.
8—2—83	” தில்லைநகர் மாதர்சங்க நிகழ்ச்சி.
13—2—83	நெல்லை - தனித் தமிழ் இலக்கியக் கழக ஆண்டு விழா. — திரு. வி. க. நூற்றாண்டு விழா —
14—2—83	சிவந்திப்பட்டி—பாவாணர் படத்திறப்பு.
15—2—83	தூத்துக்குடி உ. த. மு. க. நிகழ்ச்சி
16—2—83	கோவில்பட்டி ” ”
17—2—83	சங்கரன்கோயில் ” ”
18—2—83	கடையநல்லூர் ” ”
19—2—83	தென்காசி ” ”
20—2—83	நெல்லை மாவட்டம் (வடக்கு-தெற்கு) உ. த. மு. க. அமைப்பு மாநாடு
21—2—83	கரூர்—கன்னல் அவர்களின் ‘வெண்தாடி’ நூல் வெளியீட்டு விழா.
22—2—83	திருச்சி. ஊரக நிகழ்ச்சி.

(இதற்கு மேல் பாவலரேறு சென்னையில் தங்கியிருக்க வேண்டியிருப்பதால் அன்பர்கள் பிப்ரவரியில் நிகழ்ச்சி குறித்து நாள் கேட்டு எழுத வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.)

மலேசிய மக்களரசுச் செயல் கட்சி உறுப்பினர் திரு. கி. இராமன் தமிழகத்திற்கு வருகை தந்த பொழுது

21-1-83 அன்று தமிழ் நிலத்திற்குத் தந்த நேருரை!

ஆசிரியர் முன்னுரை :

மலேசியாவில் ஆளுங்கட்சிக்கு எதிர்க்கட்சியாக விளங்குவது குடியரசுச் செயல்கட்சி (Democratic Acting Party) ஆகும். இது பொதுமையுணர்வும் பொதுவுடைமைக் கொள்கையும் சார்ந்த ஒரு கட்சியாகும். சீனர்களும், தமிழர்களும், மலேசியர்களுமாக ஏறத்தாழ எழுபதாயிரம் பேர் இதன் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இதன் தலைவரும் பொதுச் செயலாளரும் சீனர்கள். தமிழர்களும் இதில் தீவிர உறுப்பினர்களாகவும், பொறுப்பாளர்களாகவும் இருக்கிறார்கள். இக்குடியரசுச் செயல கட்சி, மலேசியாவில் தமிழில் 'ஜனநாயகச் செயல் கட்சி' என்னும் பெயரில் வழங்கி வருகிறது.

இந்தக் கட்சியின் தீவிரத் தொண்டரும், மிகத் திறமை பெற்ற மலேசிய அரசியல் தலைவரும் ஆகிய திரு. **கி. இராமன்** அவர்கள் அண்மையில், தஞ்சை, தமிழ்ப் பல்கலைக் கழகம் அயல்நாட்டுத் தமிழர்களுக்கென்று நடத்திய 'பண்பாட்டுப் பயிற்சி வகுப்பில கலந்து கொள்ள வந்திருந்தார். அவர் மலேசியா திரும்புகையில் 'தமிழ நிலம' அலுவலகத்திற்கும் வந்திருந்தார். அதுபோது, அவரை வரவேற்றுத் 'தமிழ் நிலம்' சார்பில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவருக்கு விருந்தொன்று தந்து பாராட்டினார். அக்கால அவரிடம் நேருரை ஒன்றும் எடுக்கப் பெற்றது. 'தமிழ் நிலம்' சார்பில் நேருரை கண்டவர் **தென்மொழி ப. முருகவேள்** ஆவார்.

திரு. கி. இராமன் சிறந்த பொதுநலவுணர்வு கொண்ட ஒரு தலைவராவார். அண்மையில் மலேசியாவில் வெளிவந்துள்ள 'கொள்கைப் போராட்டம்' என்னும் அவருடைய நூலில், அவர் பேசியனவாகவும், எழுதி அறிக்கைகளாக வெளிவந்தனவாகவும் உள்ள கட்டுரைகள் அவரின் உண்மையான மக்கள ஈடுபாட்டையும், செயற்கரிய தொண்டையும், அவரின் தளராத அரசியல் உழைப்பையும் ஆற்றலையும் விளக்குவனவாகும். இவரைப் பற்றி, இவர் சார்ந்துள்ள குடியரசுச் செயல் கட்சியின், பொதுச் செயலாளரும், மலேசிய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும ஆகிய தோழர், திரு.

இலிம் கித்சியாங் அவர்கள் அந்நூலுக்குத் தந்த வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடுகிறார் 'பட்டம், பதவி, பணம் ஆகிய புல்லிய ஆசைகளுக்கு வயப்பட்டு, அரசியல பரத்தமையில் (விபசாரத்தில்) இறங்கி, அதிக விலை கொடுப்போருக்குத் தங்களின் ஆதன் (ஆன்மாச)களை விற்கப் பலர் முற்பட்டிருப்பதை நாம் பார்த்து வரும இவ்வேளையில, பொதுமக்களின் தொண்டிற்காகத் தம்மை ஆழமாக ஒப்படைத்து (அர்ப்பணித்து)க் கொண்டுள்ள, நேர்மை மிக்க அரசியல திறலார் ஒருவரின் சிறந்த எடுத்துக் காட்டாக உடன்பிறபபாளர் திரு கி. இராமன் சுடர் விடுகிறார்.'

மலேசியாவிலுள்ள தமிழர்களுக்காகவும், அதே பொழுது தாம வாழ்ந்து கொண்டுள்ள நாட்டின் அனைத்து இன மக்களுக்காகவும தம் வாழ்வு முழுவதையும ஈடுபடுத்திக் கொண்டு பொதுத் தொண்டு செயது வரும திரு. இராமன் அவர் சிறந்த பண்பாளர்; பழகுதற்கு மிகவும் இனியவர்; தெளிவாகச் சிந்தித்துக் கருத்துகளை உறுதியாகவும், விளக்கமாகவும் வெளியிடும் ஆற்றல் மிக்கவர்; சிறந்த பேச்சாளர். அத்தகைய நேர்மையும உண்மையும் வாய்ந்த தமிழர் தலைவரைத் 'தமிழ் நிலம்' அன்பர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் நாம் பெருமை கொள்கிறோம். வாழ்க திரு கி. இராமன்! வளர்க அவரது தமிழினத் தொண்டு!

—ஆசிரியர்.)

1\. தாங்கள் மலேசிய அரசியலில் எந்தப் பொறுப்பில் இருந்து வருகிறீர்கள்?

விடை : மலேசிய மக்களரசுச் செயல் கட்சியின் (Democratic Acting Party) தேசியத் தோட்டப் பிரிவு துணைக் குழுவின் தலைவராகவும், கட்சியின் தேசியக் கொள்கை பரப்பு மன்ற உறுப்பினராகவும், கட்சி வெளியீடான 'இராக்கெட்' தமிழ்த் திங்கள் ஏட்டின் ஆசிரியராகவும் இருந்து செயல்பட்டு வருகிறேன்,

2\. தாங்கள் உறுப்பினராக விருக்கும் மக்களரசுச் செயல் கட்சியின் தலைவர் யார்? அக்கட்சி எந்த ஆண்டில் தொடங்கப் பெற்றது? அதன் கொள்கைகள் எவை? அது இதுவரை அரசியலில் ஆற்றிய பங்கு என்ன? என்பவை பற்றிச் சுருக்கமாக சொல்ல முடியுமா?

விடை : பர் (டாக்டர்) சென்மான் சின் என்னும் சீனர் எங்கள் ம. செ. கட்சியின் தேசியத் தலைவராக இருக்கிறார். பினாங் மாநிலச் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும், நாட்டின் தலைசிறந்த வழக்கறிஞருமாகிய திரு. கர்பால் சிங் கட்சியின் தேசியத் துணைத் தலைவராக இருக்கிறார். மலேசிய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தோழர் திரு. லிங் கித் சியாங் அவர்கள் கட்சியின் பொதுச் செயலாளராவார். மற்றும் முன்னாள் நாடாளுமன்றக் கொறடாவும், பேரா மாநில சட்டமன்ற ம. செ கட்சியின் சட்டமன்றத் தலைவராம் ஆக இருந்த தோழர் பெ பட்டு அவர்கள் ம. செ கட்சியின் தேசியத் துணைப் பொதுச் செயலாளராக இருக்கிறார். அடுத்து, நெகிரி செம்பிலான், மாநில சட்டமன்ற ம. செ. கட்சி (எதிர்க்கட்சி)க் கொறடாவும் அதே மாநில ம. செ. கட்சியின் செயலாளருமாகிய மா. குப்புசாமி போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர்.

1966ஆம் ஆண்டு ம. செ. கட்சி தொடங்கப் பெற்றது. இந்தக் கட்சி 'மலேசியா மலேசியர்களுக்காக' என்னும் நிலையில் பல மொழி, பல இன, பல பண்பாடுடைய சமவாய்ப்பும் சம நயன் (நீதி)யையும் கொண்ட மலேசிய மக்களரசைத் தோற்றுவிக்கும் நோக்கமுடையது. எங்கள் கட்சி வெளியீடான 'இராக்கெட்' வழி நாங்கள் தேசிய மொழிகளாகக் கருதும் (ஆனால் அரசின் தேசிய மொழி மலாய் ஒன்றே) மலாய், தமிழ், சீனம், ஆங்கிலம் ஆகிய மொழியினங்களுக்குரிய நாகரீகப் பண்பாட்டு நிலைகளைக் காப்பதற்கான கருத்துப் பரப்பும் முயற்சியில் போராடி வருகிறோம். ஏறத்தாழ 470க்கும் மேற்பட்டக் கட்சிக் கிளைகளைக் கொண்டும், 70,000க்கும் மேற்பட்ட பல மொழி இன மக்களை உறுப்பினராகக் கொண்டும் தொடர்ந்து செயல்பட்டு வருவது ம. செ. கட்சி ஒன்றே. மலேசிய நாடாளு மன்றத்தின் எதிர்க்கட்சியும் ம. செ. கட்சியே.

3\. மலேசியாவிலுள்ள அரசியல் நிலை பற்றியும் அங்குள்ள தமிழர்கள் பற்றியும் தாயகத் தமிழர்களாகிய எங்களுக்கு அதிகம் தெரிய வாய்ப்பில்லை; அது பற்றிச் சுருக்கமாகவும் அதே பொழுது கொஞ்சம் விளக்கமாகவும் கூறுங்கள்.

விடை : மலேசியப் பேரரசரின் முடியாட்சிக்குட்பட்ட எங்கள் நாடு 11 மாநிலங்கள் கொண்டது. 9 மாநில மன்னர்களாலும் 2 மாநில ஆளுநர்களாலும் இருமுறைக்குமேல் தேர்ந்தெடுக்கப்படாத ஆனால் சுற்றுமுறையில் தேர்ந்தெடுக்கப்படும் மன்னரே மாமன்னராவார். மேலவை உறுப்பினர்களும் (செனட்டர்களும்) மாநில சட்டமன்ற உறுப்பினர்களும் மேலவையில உறுப்பியம் பெறுவார்கள். மக்களால் தேர்ந்தெடுககப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 155 பேரும் சேர்ந்த அரசமைப்பைக் கொண்டு மலேசிய அரசியலமைப்பு நெறிகளின்படி நாடாளுமன்றமும், சட்ட மன்றமும் செயல்படுகின்றன. உள்ளாட்சி மன்ற உறுபபினர்களும் (Local Council) நகராட்சி மன்றம், பேரூராட்சி மன்றம் ஆகியவற்றின் உறுப்பினர்களும் அந்தந்த மாநில முதலவர் வழி நேரடியாக அமர்த்தம் பெறுவர் இவர்கள் பெரும்பாலும் மாநில முதல்வரின் கட்சியைச் சார்ந்தவராகவே இருப்பார்கள்.

8 கட்சிகளைக் கொண்ட தேசிய முன்னணி ஆளுங்கட்சியாகவுள்ளது. 3 பெரிய கட்சிகளையே பெரும்பான்மையாகக் கொண்டது, அது. அக்கட்சிகளாவன: 1 மலாய்க்காரர்களை மட்டுமே உறுப்பினராகக் கொண்ட தேசிய மலாயக்காரர் ஒன்றியக் (ஐக்கிய) கட்சி. (UMNO) 2 மலேசிய சீனர் கழகம் 3. மலேசிய

(5-ஆம் பக்கம் பார்க்க)

தமிழகம் எப்படி நடத்தப் படுகிறது?

தமிழ்நாட்டில் கடுமையான மின் துண்டிப்பு. நம அனல் மின் நிலையங்கள் ஏன் அடிக்கடி நின்று போகின்றன? மேற்கு வங்கத்திலிருந்து வரும நிலக்கரியில ஒரு கல்லெடைக்கு 39 விழுக்காடு சாம்பல் தன்மை இருப்பது தான் காரணம் என்று ஒரு கருத்தும் உண்டு. வெளிநாட்டிலிருந்து நிலக்கரி இறக்குமதி செய்து கொள்கிறோம் என்று தமிழ்நாடு கோருகிறது. நடுவண் அரசு ஒப்புதல் தரவில்லை. வங்காள நிலக்கரி ஒரு கல்லெடை 390 உருபாவாம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டால் அந்த நிலக்கரி ஒரு கல்லெடை 550 உருபா ஆகிறது. ஆனல் வெளிநாட்டு நிலக்கரியில் சாம்பல் தன்மை குறைவாக இருப்பதால் (கல்லெடைக்கு 7 விழுக்காடு) நம் அனல் மின் நிலையங்கள் நின்று போகா என்று சொல்லிப் பார்த்தும் கேட்பாரில்லை தமிழ்நாடு மின்வாரியத்தின் தலைவராக 25 மாதங்கள் பதவியிலிருந்த திரு. முராரி, தம் பதவிக் காலத்தில் 50 தடவைக்கு மேல் தில்லிக்குப் போய் நிலக்கரி இறக்குமதி செய்யக் கெஞ்சிப்பார்த்திருக்கிறார். மறுத்து விட்டது நடுவண் அரசு

-ஜூனியர் விகடன் (12-1-83)

தமிழகத் தொலைக் காட்சி யாருக்காக உள்ளது?

சென்ற புத்தாண்டுப் பிறப்பைப் போலவே இவ்வாண்டுப் பிறப்பின் போதும் தமிழர்கள் ஊமையாகத் தான் தொலைக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்க, திசம்பர் 31-ஆம் பக்கல் இரவு இந்தி நிகழ்ச்சிகள் சென்னைத் தொலைக் காட்சியில் அமர்க்களப்பட்டன.

தொலைக் காட்சியைப் பொறுத்தமட்டில், தமிழ்நாட்டில் வாழும் 'அச்சாரம்'களுக்கும் 'பக்கம் சந்த்'களுக்கு மட்டும் புத்தாண்டுபிறந்ததுபோலும்! நிகழ்ச்சிகளின் நடுவில் ஒரு காட்சியில் இந்திக் கோமாளி (காமெடியன்) ஒருவர் தனியாக உட்கார்ந்துகொண்டு விழுந்து விழுந்து சிரித்தார். அது ஏதோ நம்மைப் பார்த்துச் சிரித்ததைப்போலத் தான் இருந்தது

-ஜூனியர் விகடன் (12-1-83)

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியன் பேராயம் (காங்கிரசு). இதன் தேசியத் தலைவர் டத்தோ ச. சாமிவேலு மலேசிய அரசின் பொதுப் பயனீட்டுத்துறை அமைச்சராவார். இதன் தேசியத் துணைத் தலைவர் சி. சுப்பிரமணியம் வீடமைப்பு உள்ளாட்சித் துறையின் துணை அமைச்சராகவும், ம. இ. கா. துணைத் தலைவர்களில் ஒருவரான டத்தோ. கு. பத்மநாபன் நல்வாழ்வுத் துறை துணை அமைச்சராகவும் உள்ளனர். இவர்கள் மூவரும் மலேசியாவில் பிறந்த தமிழ் வழித்தோன்றல்கள். 4. ஆவது நாடாளுமன்ற ம. இ. கா. உறுப்பினராக அக்கட்சியின் துணைத் தலைவர் வி. கோவிந்தராசும் இருந்து வருகிறார். **தேசிய முன்னணியான ஆளுங் கட்சியினது கொள்கை மலேசியா ஒரே இன, மொழி (மலாய்) சமய (இசுலாம்) நாடாக ஆக வேண்டும் என்பதே.**

எங்கள் நாட்டில் தமிழர்களுக்குத் தமிழில் மூன்று நாளேடுகளே உண்டு, 1. தமிழ நேசன் 2. தினமணி 3. தமிழோசை என்பன ஆகும். இவையும் கிழமை இரு முறை வெளிவருகின்ற தேசியத் தோட்டத் தொழிலாளர் கழகத்தின் ஏடான 'சங்கமணி'யும் செய்தி ஏடுகளாக இருக்கின்றன மாத வெளியீடுகளாகப் 'புதிய சமுதாயம்', உதயம் என்னும் இரண்டு ஏடுகள் உண்டு. அவற்றுள், 'உதயம்' அரசு வெளியீடாக வருகின்றது. எங்கள் நாட்டில் 8 லட்சம் பேர் தமிழர்கள். அவர்களில் சரிபாதியினர் தோட்டத் தொழில்களான செம்பனை, நொய்வம் (இரப்பர்) தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களாவர். மிகுதிப் பேரில் பலர் அரசு மருத்துவமனைகளிலும், தொலைபேசி, மின்வாரியம், தொடர் வண்டித்துறை, பொதுப்பணித் துறை போன்ற பல்வேறு துறைகளில் வேலை செய்கிறார்கள். மற்றவர்கள் தனியார் கட்டுமானத் தொழில்களில் வேலை செய்கிறார்கள். இவர்களைத் தவிர ஆங்காங்கே சொந்தத் தொழிலான வணிகம் முதலியவற்றில் ஈடுபட்டு வருகின்றவர்களும் மிகச் சிலராகவுள்ளனர்.

கல்வியைப் பொறுத்த மட்டில் 6ஆம் வகுப்பு வரை மட்டுமே தமிழ் பயில வாய்ப்புண்டு. தேசிய மாதிரித் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் (National Model Tamil School) பெரும்பாலும் தோட்டங்களில் மட்டுமே உள்ளன. நகர்ப்புற மக்கள் பெரும்பாலும் தங்கள் பிள்ளைகளைத் தேசிய (மலாய்) மொழிப் பள்ளிகளுக்கனுப்புவதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர். மேல் நிலைக் கல்விகளனைத்தும் தேசிய மொழியான மலாய் வழி மட்டுமே (கல்லூரி பல்கலைக் கழகக் கல்வி) பெற முடியும். 6 ஆம் வகுப்புக்குப் பிறகு தமிழ் பயில வேண்டுமென்றால், மலாய் மொழிப் பள்ளிகளிலுள்ள 15 தமிழ் மாணவர்களின் பெற்றோர்களின் கோரிக்கையை அடிப்படையாக வைத்துத் தான், தமிழ் ஒரு பாடமாக, கிழமைக்கு ஒரு வகுப்பு (Period) மட்டுமே கற்பிக்கப் பெறும். (Remove Class) என்ற பெயரில் 6-ஆம் வகுப்பு வரை கடந்த காலங்களில் படித்த 6, 7 பிரிவுப் பாடங்களையும் ஒரே ஆண்டில் மலாய் மொழி வழிப் படித்துத் தேர்வு எழுதித் தேறினால் மட்டுமே மேற்கல்விக்குச் செல்ல முடியும். இது தமிழ்ப் பிள்ளைகளின் தாய்மொழி வளர்ச்சிக்கு ஒரு தடையாக அமைந்துள்ளது. தாயகத்திலிருந்து வரும் தலைவர்கள், கலைஞர்கள் அரசியல் முகாமையர்கள் இலக்கிய எழுத்தாளர்கள், பல்வேறு இயக்கச் சார்பினராகிய பலரும் சுற்றுப் போக்கர்கள் போல வந்து இங்குச் சில குறிப்பிட்ட சமய, இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு நிறைவு பெற்றுத் திரும்புகிறார்களே தவிர, அங்குள்ள எம் தமிழர்கள் (குறிப்பாகத் தோட்டத் தொழிலாளர்கள் பிற உழைத்து வாழ்பவர்களைப்) பற்றித் தெரிந்து கொள்ளாதது எங்கள் குற்றமன்று. அது மிக வருந்தற்குரியது ஆகும். எனவே எதிர்காலங்களில் வருகின்றவர்கள் மலேசியத் தமிழர்களின் வாழ்வு நிலையைக் கண்டறியும் உணர்வோடு வந்து, அங்குள்ள உண்மை நிலைகளைக் கண்டு அவற்றைத் தமிழகத் தமிழர்களுக்கு முறையாகத் தெரிவிக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

4. தாங்கள் தமிழகத்திற்கு இதற்கு முன் எத்தனைத் தடவை வந்திருக்கிறீர்கள்? தங்களின் பிறப்பு, வளர்ப்பு, வாழ்க்கை முழுவதும் மலேசியாவில் தான் நிகழ்ந்ததா? தனிப்பட்ட வாழ்க்கையில் தங்கள் ஈடுபாடு என்ன? பொது வாழ்க்கைக்கு எப்பொழுது வந்தீர்கள்?

விடை: தமிழகத்திற்கு இஃது எனது மூன்றாவது செலவு. முதன் முதல் டென்மார்க்கில் நடைபெற்ற சமவுடைமை (சோசலிச) இளைஞர் மாநாட்டினின்று திரும்பும் வழியில் தில்லி, பம்பாய் வழியாகத் தமிழகத்தில் 3 கிழமை சுற்றுச் செலவு மேற்கொண்டிருக்கிறேன். இரண்டாவது முறை, 1980-இல் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு. ம. செ. கட்சியின் பேராளராக வந்துள்ளேன். இப்பொழுது மூன்றாம் முறையாக, தஞ்சை, தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்பட்ட 'தமிழ்ப் பண்பாடு ஓர் அறிமுகம்' என்ற 30 நாள் பயிற்சிக்கும், ம. செ. கட்சியின் பேராளராக வந்துள்ளேன்.

நான் நொய்வத் (இரப்பர்) தோட்டத்தில், தொழிலாளர்களான பெற்றோருக்கு 1934-இல் பிறந்து, தோட்டப் பள்ளியில் படித்தேன். 1952 முதல் தன் மதிப்பு (சுயமரியாதை)க் கழகத்திலும், 57 முதல் தேசிய சுரங்கத் தொழிலாளர் கழகத்தின் அமைப்பாளராகவும், மலேயா தொழிற் கட்சியின் சோகூர் மாநிலத்தின் அமைப்புச் செயலாளராகவும் இருந்து, 67 முதல் ம. செ. கட்சியின் உறுப்பினராகவும் இருந்து வருகிறேன்: மலைமணி, சமநீதி ஆகிய இரண்டு மாத ஏடுகளை நடத்தி 77இல் பொருளியல் அழுத்தத்தால் நிறுத்தி விட்டேன். அண்மையில் கொள்கைப் போராட்டம் என்ற நூலை வெளியிட்டுள்ளேன். என் மனைவி பெயர் திரேசா. நான் கலப்பு மணம் செய்துக் கொண்டவன். எனக்கு அன்புச் செல்வன் (18 அகவை) சந்திரிகா (16 அகவை) முரளி (12 அகவை) மாறன் (5 அகவை) என்னும் நான்கு மக்களும் இருக்கின்றனர். இப்பொழுது ம. செ. கட்சியின் முழு நேர மொழி பெயர்ப்பாளராக இருந்து வருகிறேன்.

5. மலேசியாவில் உள்ள தமிழர்களின் இப்பொழுதைய வாழ்க்கை நிலை எப்படி உள்ளது? இங்குள்ள தமிழர்களின் வாழ்க்கை நிலையோடு அவர்களுடைய வாழ்க்கை நிலையை ஒப்பிட்டுக் கூறமுடியுமா?

விடை: மலேசியத் தமிழர்கள் மூன்று வகையாக வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் அரசு அலுவலர்கள், வணிகர்கள், தோட்டத் தொழிலாளர்கள் எனப்படுவார். அரசு அலுவலர்களுக்கும், வணிகர்களுக்கும் பெரும்பாலும் குடியுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் பலருக்குக் குடியுரிமை கொடுக்கப்படவில்லை. இவர்கள் சிவப்பு அடையாள அட்டை வைத்திருப்பார்கள். சிவப்பு அடையாள அட்டைகள் வைத்திருப்பவர்களிலும், 'வேலை இசைவு' (Work Permit) பெற்றவர்கள் மட்டுந்தாம் தோட்டங்களில் வேலை செய்ய முடியும். அவ்விசைவு பெறாதவர்கள் எங்கும் வேலை செய்ய இயலாது. அவர்களின் குடியுரிமை வேண்டுகோள்களை உடனடியாக ஆய்வு செய்து குடியுரிமை வழங்க வேண்டுமென்று எங்கள் கட்சி வலியுறுத்தி வருகிறது. தமிழகத்தோடு ஒப்பிடும்போது அங்குள்ள தமிழர்கள் பெரும்பாலும் உடல் உழைப்பாளர்களே! ஆனாலும் தமிழ், சமயம் பண்பாடு ஆகியவற்றைப் பேணிக் காப்பதில் ஊக்கமாகவும் உறுதியாகவும் இருந்து வருகிறார்கள் இவ்வகையில் மலேசியத் தமிழ் எழுத்தாளர்களும் அந்த நெறியோடு எழுதி வருகிறார்கள்.

6. நாங்கள் தொடங்கியுள்ள 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்'தின் குறிக்கோள், பொதுவாக உலகில் பல நாடுகளிலும் சென்று வாழும் தமிழர்களுக்குள் ஓர் இணைப்பையும் அதன் வழி ஆங்காங்கு அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலைகளில் ஒரு வகை வாழ்க்கை முன்னேற்றத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்பது. இந்தக் குறிக்கோளுக்குத் தங்களுடைய உதவி எந்த வகையில் கிடைக்கும் என்பதைக் கூறவியலுமா?

விடை: 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்'தின் குறிக்கோள் எங்களுக்கு ஏற்புடையதே. உலகத் தமிழினம் ஒன்றுபடுவதும், அதன் வழி உலகளாவிய தமிழினத்தின் உரிமைகள் காக்கப்பட்டுப் பேணுவதற்கும் உ. த மு. கழகம் முன்னோடியாக ஆவன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். இவ்வகையில், 1. மலேசியத் தமிழர்களில் குடியுரிமையற்றுச் சிவப்பு அடையாள அட்டைகள் வைத்திருக்கும் 65,000 பேருக்கும் குடியுரிமை வழங்கக் கேட்டுக் கொள்வது. 2. இரண்டாம் உலகப் போரின் பொழுது சப்பானியர்களால சயாம் தொடர் வண்டிப் பாதையைச் செப்பனிடுவதற்காகக் கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்ட இலக்கக் கணக்கான தோட்டத் தொழிலாளர்களில் 90 விழுக்காட்டினர் தமிழர்களே. அவர்களில் உயிரோடு திரும்பியவர்களின் எண்ணிக்கை மிகச்சில ஆயிரங்களேயாகும் சயாம் தொடர் வண்டிப்பாதை செப்பனீட்டு வேலையிலீடுபட்டு மடிந்தவர்களுக்காக சப்பானிய அரசிடம் **இரத்தக் கடன்** என்னும் பெயரில் உயிரிழந்தவர்களுக்கான இழப்பீடு கேட்டு முறையீடு செய்திருந்தோம். அதை மலேசிய அரசு தீர்வு கண்டதன் வழி, நல்லெண்ண உதவித் தொகையாக 2½ கோடி வெள்ளியை (ஏறத்தாழ 10 கோடி உருபாவை)ப் பெற்றுள்ளதாக அண்மையில் நாடாளு மன்றத்தில் அறிவிக்கப் பெற்றது. இந்த நல்லெண்ண உதவித் தொகையை, அவர்களின் வழித்தோன்றல்களான தோட்டத் தொழிலாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் பெற்றுத்தருவது ஆகியவற்றில் உ. த. மு. கழகம் முயன்று ஆவன செய்ய வேண்டுமபடி கேட்டுக்கொள்கிறோம். மேலும், மலேசியாவில் கோரிக்கையற்ற நிலையில், தொழிலாளர் வைப்புத் தொகையாகவுள்ள 1 கோடி வெள்ளியை (ஏறத்தாழ 4 கோடி உருபா) (நாட்டை விட்டு வெளியேறியதாலும் பிறங்கடைகள் (வாரிசு) அமர்த்தாததாலும் ஏற்பட்டவை) அதுபோய்ச் சேர வேண்டிய தமிழர்களை முறையாக ஆய்வு செய்து தேடி, உரியவர்களுக்குச் சேர்க்க உ. த. மு. கழகம் முயலும் என்று எதிர்பார்க்கிறோம்.

உ. த. மு. கழகக் குறிக்கோளுக்கும், முயற்சிகளுக்கும் எங்களாலான முழு ஒத்துழைப்பையும் என்றும் தருவோம்

7. 'தென்மொழி'யைப் பற்றியும்', உலகத்தமிழின முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும், அதன் செய்தியிதழான 'தமிழ்நில'த்தைப் பற்றியும் உங்கள் மேலான கருத்துகள் என்ன?

விடை: கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாகத் 'தென்மொழி'யை அறிவேன். 'தமிழ் நிலம்' உலகத் தமிழரிடையே ஒற்றுமையை ஆழ உழுது, விதைக்கப் பாடுபடுவதுடன், தமிழ், தமிழ் பண்பாடு, உரிமை இவற்றை உலகளாவிய நிலையில், காக்கவும், பேணவும் தனது பங்கைச் செய்யும் என நான் முழுமனத்துடன் நம்புகிறேன். மலேசியத் தமிழரிடையே 'தமிழ் நிலம்' பரவுவதற்கு என்னாலான அனைத்தும் செய்வேன் என்று உறுதி கூறுகிறேன். (நேருரை நாள்: 20—1—83)

ஒரு முறையீடு

உ. த. க. வினின்று பிரிந்ததா உ. த. மு. க.

பேரன்புசால் ஐயா,

திருவாரூர் இயற்றமிழ்ப் பயிற்றகத்தாரின் பாவாணர் (உ. த க.) நாட்குறிப்பைப் பார்த்தேன். மொழி, குமுகாயம் போன்ற ஏழு கொள்கைகளோடு உலகத்தமிழின முன்னேற்றக்கழகம் 'பிரிந்தது' எனக்குறிப்பிட்டுள்ளார்கள். மொழி நூற் கதிரவன் ஐயா பாவாணரின் எண்ணம், கருத்து போன்றவற்றுக்கு வடிவமைத்து செயற்படுத்த முயன்றவர், வெளியிட்டவர், உ. த. க. தலைமையின் முன்னுக்குப் பின் முரணான இயக்கப்போக்குகளுக்குத் தக தம்மால் இயக்கத்தைச் செயற்படுத்த முடியாத நிலையில் விலகி, 13 ஆண்டுகளுக்குப் பின் அதனினும் விரிந்த கொள்கைகளோடு உ. த. மு. க. என்ற இயக்கம் கண்டதைப் பயிற்றகத்தார் பிரிந்தது என்க்குறிப்பிடுவது உண்மையை மறைக்கவா? அல்லது தங்கள் பெயர் வரவேண்டும் என்பதற்காக எழுத்துச் சீர்திருத்தம் என்ற பெயரில் மொழியைச் சிதைப்பது போன்ற சிதைப்பாளர்கள் பட்டியலில் சேர்ப்பதற்கா! இலக்கணத் தொண்டு செய்பவர் உலகத் தமிழ் முன்னேற்றக்கழகம்' எனக் குறித்தது எற்றுக்கோ! தனித்தமிழ்க்கழக வரலாற்றைக் குறிப்பிட்டவர்கள், உண்மையான செய்தியைக் குறித்திருந்தால் நாட்குறிப்பு இன்னும் நன்றாக இருந்திருக்கும்.

அன்புடன்
தென்மொழி
ப. முருகவேள்

நாம் என்ன செய்ய வேண்டும்?

"சிலர் இந்தியாவை நினைத்துத் தமிழகத்தை மறந்தால் நாம் தமிழகத்தை நினைத்து இந்தியாவை மறப்போம்!"

—புலவர் புலமைப்பித்தன்

(9-1-83 இல் தமிழாசிரியர் கழகச் சார்பில் நடந்த கோவை, தூய மைக்கேல், மேனிலைப்பள்ளியில் நடைபெற்ற முப்பெரும் விழாவில)

ஆரியச் சூழ்ச்சிக்கிலக்கான இராமன் கதை

- நன்னன் -

அருக்கியின் இராமாயணமான 'கோதானி இராமாயண'த்தில் தசரதனுக்குப் பிறந்தவனான சகசரபாகு என்பவனின் மக்களே இராமனும், இலக்குவனும் என்றும், இவர்களுக்கு வேறு உடன் பிறந்தோர் இல்லையென்றும் இவர்கள் இருவரையுமே சீதை மணந்து கொண்டாள் என்றும், இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த போரில் இராவணன் தோல்வி அடைந்தான் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திபெத்தில் வழங்கும் இராமாயணத்தில் சீதை இராவணனின் மகள் என்றும், இராமன் நாட்டை இலக்குவனிடம் ஒப்படைத்து விட்டு, விரும்பித் தனியே காட்டுக்குச் சென்றான் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவனுடன் சனகனோ அல்லது வேள்வி செய்யத் துணையாக விசுவாமித்திரனோ இல்லையெனபதும், இராமன் சிவவில்லை ஒடித்ததாகவும் குறிப்பிடப் பெறவில்லை அங்ஙனம் காட்டுக்குச் சென்ற இராமன் அங்கு உழவர்களால் வளர்க்கப்பட்டு வந்த சீதையை அவர்களின் வற்புறுத்தலைத் தட்ட முடியாமல் மணந்தான் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது மேலும் சனகனுக்கு இரு பனைவியர் என்றும் மூத்தவளுக்கு இராமனும், இளையவளுக்கு இலக்குவனும் பிறந்தனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் வழங்கும் பிற இராமாயணங்களிலும் சீதை இராவணனின் மகள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரும்பாலும் இராமாயணங்கள் ஏறத்தாழ ஒரே மாதிரியான செய்திகளைக் குறிப்பிடும் போது-வேத ஆரிய (இந்து) மதம் சார்பான இராமாயணங்கள் மட்டிலும் ஏன் வேறுபட்ட செய்திகளைக் குறிப்பிடுகின்றன?

அரசிளங்குமரியாய் வாழவேண்டிய தன் மகள் தனிக் காட்டில் அவல வாழ்க்கை வாழ்கின்றாளே என்றெண்ணிய இராவணன், அதே நேரம் அவளைத் தன் மகள்தான் என்று வெளிப்படையாக அப்போதைக்குத் தெரிவிக்கவியலாத நிலையில் அழைத்துச் சென்றான் என்கின்ற உண்மையைக் குறிப்பிட்டிருந்தால், இராவணனின் மேல் இப்படியொரு பெரும் வெறுப்பை மக்கள் இடையில் வளர்த்திருக்க முடியாது. இராமன் தொடுத்த போர் கூட ஒரு வகையில் நேர்மையற்றது எனபதும். கலக்கமுற்றிருந்த இராவணன் தன் மருமகனுடனே மோதும் போது தோல்வி கண்டான்; கொலைப்படவில்லை என்று குறித்திருந்தால், அந்தக்கதை ஓர் இயல்பான கதை என்று மட்டிலும் கொள்ளப்பட்டிருக்கும். இராமன் மேல் தெய்வத்தன்மை ஏற்றப்பட்டிருக்க முடியாது. இராவணனும் அரக்கனாக ஆகியிருக்க மாட்டான். மக்களும் இக்கதையைப் பெரிதாக எடுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

தெய்வத்தன்மை ஏற்றப்பட்ட இராமன் இறைவனின் திருவிறக்கம் ஆயினான். கோயில் கட்டி வழிபடும் தெய்வமானான். இதனால் ஏராளமான ஆரியப்பார்ப்பனர்க்குப் பிழைப்புக்கு வழியாயிற்று—இராவணனும் இவர்களுக்குப் பிழைப்புக்கு வழி கோலினான். ஆம். அவனது 'கொடும்பாவை' எரிப்பிலும் இவர்கள் பாடு கொண்டாட்டந் தானே! ஆரியச்சூழ்ச்சி எதிலெல்லாம் ஊடுருவியிருக்கிறது பார்த்தீர்களா?

அடிப்படை. "செங்கதிரோன்"—கிழமையிதழ்

சிங்கப்பூர்ச் செய்திக் கதிர்

பாவலர் முல்லைவாணன் அவர்களின் நூல் வெளியீட்டு விழா

சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவரும் தனித் தமிழ்ப் பாவலரும் ஆகிய பாவலர் முல்லைவாணன் அவர்களின் அரிய இனிய சிறுவர் பாடல் நூலகளின் வெளியீட்டு விழா 15-1-83 ஆம் நாள் காரிக் (சனி) கிழமை மாலை 6 மணிக்கு, கோவிந்த சாமிப் பிள்ளை கல்யாண மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. தமிழர் திருத்தச் சங்கத் தலைவர் தமிழ நெறிக் காவலர் அ விக்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தமிழர் பேரவைத் தலைவர் திருமகு.' கந்தசாமி அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு எம். கே. ஏ. சபார். அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

பாவலர்கள்: க. து. மு. இக்பால், மணிவண்ணன், முத்தமிழன் முதலியோரின் வாழ்த்துப பாக்களும்; சி.து. எ.கழகத் துணைத் தலைவர் பாவலர் அமலதாசன, மாசவி இலக்கிய மன்றத் தலைவர் மலர் மாணிக்கம், கல்விக் கழகத் தமிழிலக்கியக் கலாச் சார மன்றத் தலைவர் இளம. சிவகுமார் முதலியோர் கருத்துரை ஆற்றினர்.

இந்நிகழ்ச்சித் தொடர்பாக செய்தி இதழ்களின் அறிக்கையாளர் கூட்டம் (11-1-83) ஒன்றும், வானொலி நேருரை (13-1-83) ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சித் தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் செய்தது.

சயவர்த்தன அரசின் முப்மடங்கு ஏமாற்று வேலை

இலங்கைக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு சே. ஆர் சயவர்த்தன அவர்கள் 26-11-82இல் யாழ்ப்பாண நகரத் திறந்த வெளி அரங்கில் மக்கள் நீர்ப்புக்கு ஆதரவு தேடி நடைபெற்ற கொள்கை பரப்புக் கூட்டத்திலே பல கருத்துகளைத் தெரிவித்தார். நன்னீர்த் திட்டம், மகாதேவா பாலம், கப்பற்சேவை. வேலை வாய்ப்பு முதலிய பலவற்றைப் பேசினர் இவற்றை எல்லாம் நிறைவேற்றவும் செயற்படுத்தவும் போவதாகவும் உறுதியளித்தார். நிலப்பாங்கிலும் அரசியற் போக்கிலும் பாலை நிலமாகவுள்ள யாழ் மாவட்டத்தைச் சோலைநிலமாக்க நடவடிக்கை எடுக்கப் பெறும் என்றும இனிப் பாகப் பேசினர்.

இன்றுவரை இந்த ஒன்றிய (ஐக்கிய) தேசியக் கட்சி அரசு, அஃதாவது சே. ஆரின் அரசு கூறினவற்றை — எழுத்தில் பொறித்தவற்றை — பாராளுமன்றத்தில் பகர்ந்தவற்றைச் செய்யாமல் தமிழ்மக்களை ஏமாற்றமும் ஏக்கமும் வெறுப்பும் துயரமும் அடையச் செய்து வந்துள்ளது என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

இந்த ஒன்றிய (ஐக்கிய, தேசியக் கட்சி 1977 ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு முன் 8 தொகுதிகளை மட்டும் பெற்று, மங்கி மடிந்து கிடந்த நேரத்தில் தமிழர் சிக்கலை அலசி ஆராய்ந்து சில உண்மைகளைக் கண்டது. இதனை, அது தனது 1977 ஆம் ஆண்டுத் தேர்தல் அறிக்கையில் பின்வருமாறு கூறியுள்ளது.

"தமிழ் பேசும் மக்களுக்கு பலவகையான சிக்கல்கள் உண்டு என்பதை ஐ. தே. கட்சி ஏற்றுக் கொள்கிறது. இந்தச் சிக்கல்களைத் தீர்க்காமையே தனி அரசை நிறுவ முயலும் இயக்கத்தைத் தமிழ் மக்களை ஆதரிக்கச் செய்தது

இந்த சொல்லுறுதிகள் தேர்தல் கால அறிவெழுச்சியால் வெற்றி பெறுவதற்காகக் கொடுக்கப்பட்டவை. 'குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு' என்பதைப் போலத் தேர்தல் பேச்சு தேர்தல் முடிந்தால் போச்சு என்று கூறலாம். ஆனால் இந்தச் சிக்கல்களை வெறும் தேர்தல் காலக் கருத்துரையாக இந்த அரசு ஆக்கவில்லை.

பாராளுமன்றத்தில் (4-8-1977) ஆம் நாள் நிகழ்த்தப்பட்ட கொள்கை விளக்க உரையில் இந்த சிக்கல்களும் இவற்றைத் தீர்க்க எடுக்கப்படும் நடவடிக்கைகளும் மீண்டும் வற்புறுத்தப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் சிக்கலைத் தீர்ப்பதற்கு இந்த அரசு கொள்கை விளக்க உரையில் கூறியவாறு அனைத்துக்கட்சிகளின் மாநாடு கூட்டப்படவுமில்லை. அது குறிப்பிட்ட நான்கு சிக்கல்களும் தீர்க்கப்படவுமில்லை. எல்லாம் ஏமாற்று வேலையே என்பதை இன்று தமிழ் மக்கள் மீண்டும் அறிந்துளர்.

இந்த அரசு செய்த புறக்கணிப்புகளாலும், ஒதுக்கல்களாலும், வகுப்புக் கலவரங்களாலும், அரசுப் படைகளின் அஞ்சத்தக்க செயல்களாலும் முன்பு இந்த அரசு தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு, எல்லாத் தமிழ் மக்களுமே தனிநாடு—தமிழ் ஈழம் தான் தமிழ் மக்களின் சிக்கல்கள் யாவற்றையும் தீர்க்கும் ஒரே ஒரு வழி என்ற அசைக்க—மாற்ற முடியாத முடிவுக்கு வந்து விட்டார்கள். இதனை இந்த அரசு அறியாமலிருக்க முடியுமா? இதனை அறிந்தும் அறியாதது போல அது நடப்பதால் நாட்டிலுள்ள தேசிய இனங்கள் இரண்டும் இன்றும் பல இன்னல்களுக்கும் பேர் அழிவுகளுக்குமே ஆளாகும் என்பதை பிற நாட்டாரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த அரசு செய்வதாகக் கூறிச் செய்யாமல விட்டவற்றிலே சிலவற்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

"தமிழ் மொழியையும் இந்நாட்டு தேசிய மொழியாகப் புதிய அரசியலமைப்பில பொறித்துள்ளோம்.' என்று இந்த அரசு உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும கருத்துப் பரப்புதல் செய்து வருகின்றது. புதிய அரசியலமைப்பில் தமிழ் மொழிக்குக் கொடுக்கப்பட்டுள்ள அரைகுறை உரிமைகளைத் தானும் நடைமுறைப்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. சென்ற அரசு காலத்தில் தமிழ் மொழி எப்படிப் புறக்கணிக்கப்பட்டதோ அப்படியே இப்பொழுதும்—புதிய அரசியலமைப்பில் தமிழுக்கும் உரிய இடம் கொடுத்தோம் என்று வாய்ப்பறை அறையும் இந்த அரசின் ஆட்சியிலும்— தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இதனை நான் பாராளுமன்றத்தில் 7-7-83 ஆம் நாள் நிகழ்த்திய உரையில் சுட்டிக்காட்டி இந்த அரசுக்குச் சூளுரையும் விட்டேன்.

'இந்த அரசு தமிழ்மொழியைத் தேசிய மொழியாக ஆக்கிவிட்டதாகக் கூறுகின்றது. அது பற்றி அரசியலமைப்புச் சட்டத்தில் எழுதப்பட்டுத்தான் இருக்கின்றது. ஆனால் இந்த அரசு அதை ஏட்டுச்சுரைக்காயாக ஆக்கிவிட்டதென்று நான் பல முறையும் எடுத்துக் கூறினேன். இன்றும் கூறுகின்றேன்; இனிமேலும் கூறிக்கொண்டுதான் இருப்பேன். இஃது ஏமாற்றுத் தந்திரமேயென்று நான் இந்த அவையில் கூறுகிறேன். இதை யாரேனும் எதிர்க்க விரும்பினால், சூளுரைக்க விரும்பினால் இப்பொழுதும் அதைச் செய்யலாம்.'

இது நான் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரையின் ஒரு பகுதியாகும். அன்று நான் நிகழ்த்திய உரையிலிருந்து மேலும் ஒரு பகுதியை இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

"தமிழ் மொழி உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கான சுற்றறிக்கையை வெளியிடுமாறு இந்தச் சபையில் நான் அமைச்சரை 6-8-80 முதல் ஐந்து முறைகள் கேட்டேன். ஐந்தாவது முறை கேட்ட பொழுது 6-11-81 இல் மாவட்ட மேல் வளர்ச்சி அமைச்சரான அவர் எனக்கு அளித்த மறுமொழியில் மாண்புமிகு ஊர்காவல்துறைத் தொகுதி உறுப்பினர் வினவிய சுற்றறிக்கை பெரும்பாலும் அடுத்த ஓரிரு கிழமைகளுக்குள்ளாக அமைச்சரவையின் இசைவைப் பெற்று நடைமுறைப்படுத்தப்படும என்ற கடைசி உறுதியை உங்களுக்கு இந்தச் சபையில் அளிக்கிறேன்" என்று கூறினார். இன்று ஏறக்குறைய ஓராண்டுக் காலமாகப் போகின்றது. அந்தச் சுற்றறிக்கை இன்னும் வெளிவரவில்லை."

இந்தச் சுற்றறிக்கைக்கு என்ன நடந்ததென்பதை அறிய நான் இந்த அமைச்சரிடம் இந்தச் சுற்றறிக்கை அமைச்சரவையின் அதிகாரத்துக்கு எப்பொழுது அனுப்பப்பட்டது என்ற ஒரு கேள்வியைப் பாராளுமன்றத்தில் கேட்டேன் இதற்குச் சென்ற மாதம் 25ஆம் பக்கல் மறுமொழி கொடுக்கப்பட்டது. மறுமொழியில் 1980 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 28 ஆம் நாள் அமைச்சரவைக்கு அனுப்பப்பட்டது என்று கூறப்பட்டது. ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளாகியும் அமைச்சரவை இதை இன்னும் கவனிக்காமல் இருக்கின்றது. இதனால் இந்த அரசு தமிழ்மொழிச் சிக்கலுக்குக் கொடுக்கும் முதன்மையும், முன்னீடும் எத்தகையது என்பதை அறிந்து கொள்ளலாம்.

இந்த அரசு அரசியலமைப்பில் தமிழுக்கும் உரிய இடம் கொடுத்துள்ளோம் என்று கூறிக்கொண்டு நடைமுறைப்படுத்தாமல் இருப்பது ஒரு மடங்கு ஏமாற்று வேலையாகும். இந்தத் தமிழ் உரிமைகளை நடைமுறைப்படுத்த ஒரு தமிழ் அமைச்சரை அமர்த்தியிருக்கிறோம் என்று கூறுவது இரு மடங்கு ஏமாற்று வேலை. இந்த அமைச்சர் தமிழ் உரிமைகளை நடைமுறைப்படுத்தச் சுற்றறிக்கை வெளியிடப்படும் வெளியிடப்படும் என்று பலமுறை பாராளுமன்றத்திலே கூறி இன்னும் வெளியிடாமலிருப்பது மும்மடங்கு ஏமாற்று வேலையாகும்.

சென்ற அரசு இந்த அரசைப்போல இப்படி மும்மடங்கு ஏமாற்று வேலையிலீடுபடவில்லை.

(தொடரும்)

பண்டிதர். கா. பொ. இரத்தினம் க.மு.
இலங்கை, பாராளுமன்ற உறுப்பினர்.

ஒரு வேண்டுகோள் திட்ட மடல்!

புதிய விடியல் தோன்றட்டும்! புரட்சி வெடிப்புகள் வெடிக்கட்டும்!

- ஒடவை. ந. தமிழ்வேந்தன்

தமிழ் நெஞ்சுடைய ஐயா,

வணக்கம். தமிழினத்தைச் சூழ்ந்த அறியாமை இருளைப் பகுத்தறிவால் அகற்றவும் புதிய எழுச்சியூட்டவும், தமிழினத்திற்குப் பொருந்திய 'பொதுவுடைமைப் பொருளியல் நிலையினை எய்தவும், உலகெங்கும் கொடிகட்டிப் பறந்த தமிழினம் தன்னிலத்தில் தாழ்த்தப்படுவதைத் தடுக்கவும் பிழைக்க வந்தவர்களால் நமக்குள் உள்ளவனையே விட்டு, நம்மை அழிக்க முயலும் வஞ்சகத்திலிருந்து வெளிச்சம் பெறவும், வந்தாரை வாழவைத்த தமிழகத்தில் இன்று சொந்தப்பிள்ளைகள் சொறி, சிரங்கால் வாடுவதையும், சோற்றுக்குத் தவிப்பதையும் போக்கவுமான பெரும்பணிகள் நம்முன்னே மலையைப் போல உள்ளன!

எழுச்சி எழு ஞாயிருய்த் தோன்றிய தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், அவர் வழிவந்த ஏற்றமிகு தம்பிகளும் தன்னுணர்வு மீட்புப் பணியாற்றப் பார்ப்பனக் கோட்டையின் அடித்தளத்தை உலுக்கி உடைத்தெறிந்தது உண்மைதான் என்றாலும், அதற்குப் பின் நிகழ்ந்த சில ஊடுருவல்களால் இன்று மாற்றார் கொட்டமும் புதிய வடிவமைப்பில் இன அழிப்பு வேலையும் மீண்டும்—ஆனால் முன்னைவிடத் தீவிரமாய் நடைபெறுகின்றன.

பல்வேறு வடிவங்களில் அவர்களுக்கு ஈடுகொடுக்க வேண்டிய அழுத்தமான நேரமிது...ஆனால் • அவர்கள் இன்றைய ஆள்வோரைப் பயன்படுத்தி நமது கவனத்தைத் திசை திருப்பி விடுகின்றனர்—அதே நேரத்தில் நமது வழிச் செலவையும் சாரமில்லாமல் வலு இழக்கச் செய்கின்றனர்.

1. திரைப்படத்துறையில் புதுமையினை நம்மவர் விளைவித்தோம். புதுமை, பொதுமை, மறுமலர்ச்சி, அறிவு வளர்ச்சி, தூய காதல், மொழி வளர்ச்சி இது நமது கலைப்புரட்சி!

பால் உணர்ச்சி, ஒழுங்கீனம், கற்பழிப்பிலும் ஒரு நெறி, உடைக்குறைப்பு. அருவருப்பான நடனம்-இஃது அவர்கள் புரட்சி—இதனால் அவர்களுக்குப் பணம் கிடைப்பது மட்டுமன்று; பெற்றோர் பேணல் இல்லா இளம் தமிழ்ப் பிஞ்சுகள் வெம்புகின்றன! இதனால் எதிர்காலத் தமிழர்க்கு அறிவு இருட்டடிப்பு செய்யப்படுகிறது.

2. இதழ்கள் மூலம் தமிழர்களின் படிக்கும் உணர்வைத் தூண்டி எழுத்துகள் மூலம் புதுமை செய்தவர்கள் நம்மவர்கள். இன்று—சதைக் காட்சிப் படம் போட்டுப் பச்சை பச்சையாய் எழுதி நாகரிக, பண்பாடு அழிப்புச் செய்வதோடு தமிழில் பிற மொழிக் கலப்பை அதிகப் படுத்தி மொழியழித்து இழிவுபடுத்துகின்றனர்.

3. காளி, கறுப்பன், மூக்கன், கருப்பட்டி, ராக்காயி, காத்தாயி என்பன போன்ற மக்கள் வழங்கும் பெயர்களை, அன்பழகன், அறிவழகன், செழியன், சேந்தன், தமிழரசன், செல்வன், செல்வி, பூங்கொடி, மலர்விழி என்பன போன்ற எழிலான தமிழ்ப் பெயர்களை வழங்கச் செய்தவர் நமமவர். இன்றோ சுரேஸ், ரமேஸ், காமேஸ், லலித், லாவண் சுரேகா, நிரஞ்சனா, ஸ்வப்னா என்று வேற்றகத்துப் பெயர்களைத் தமிழகத்தில் வழங்க வைப்பவர்கள் அவர்கள்.

4. ஆர். எசு எசு. அவர்கள் இளைஞர்களோடு நம் இளைஞர்களை மதவெறியூட்டித் தற்காப்புப் பயிற்சிகளை வழங்கி. சில குருகுலங்கள் பள்ளிகள் கல்லூரிகள் அமைத்து. அதில் பாடத்திட்டத்தோடு மதப்போதை யூட்டிப், பார்ப்பன முறைகளின் பழைய வடிவங்களை உயிர்ப்பிக்க முயற்சி செய்கின்றனர். அதற்குச் சில வெற்றிகள்கூட ஏற்பட்டுள்ளன அவை அண்மையில் நடந்த ஞானரதக் கலவரங்கள் (புளியங்குடி மண்டைக் காடு).

5. இதற்கிடையில் பொதுவுடைமைக் கட்சிகளில் சேர்ந்து கொண்ட சில பார்ப்புகள் தமிழர் பண்புகளை இழித்து பேசுவதோடு எதுவென்றது பெரியாரிசமா? மார்க்கிசமா? (என்னவோ...பெரியாரும், மார்க்சும் குழாயடிச் சண்டை போட்டுக் கொண்டதைப்போல) என்று கேட்டு 30 ஆண்டுகளாக இந்த மண்ணில் பொதுமை பூக்க விடாமல் தடுத்தவர்கள்! அவர்கள், தமிழர்களிடையே திராவிட தமிழ் நல இயக்கங்களை இழிவுபடுத்திப் பேசியும் எழுதியும் வருகின்றனர்.

6. கிறித்தவர்கள் சிலரும், ஆங்கிலப்பள்ளி என்ற பெயரால் கிறித்தவ மதவெறியூட்டியும் ஆங்கில வேட்கைமூட்டியும் அவர்களொரு புறம் அழிப்பு வேலைகள் செய்து வருகின்றனர். இந்த நிலையில் கலைஞர் அவர்களும், வீரமணி அவர்களும், பெருஞ்சித்திரனார் அவர்களும் மற்ற தீரர் சிலரும் எழுதியும் பேசியும மட்டுமே வந்து கொண்டிருந்தால் மட்டுமே போதாது.

7. "எமது சிந்தனை அடுத்த தேர்தலைப் பற்றியது மட்டுமன்று அடுத்த தலைமுறையைப் பற்றியதும் தான்"—என்று பேசுவது உண்மையென்றால் பார்ப்பனர்களுக்கும், தமிழை—தமிழரை—அழிக்க நினைப்பவர்களுக்கும் எல்லா வடிவத்திலும் எதிரடி கொடுக்க நம்மை நாமே அணியப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நம்மவரின் இடையேயுள்ள மனக்கசப்புகளை விட்டுக் கொடுத்துத் தமிழினத் தளபதிகளே, தமிழினக் காவலர்களே, தமிழினத் தலைவர்களே முன் வாருங்கள்!

நடந்தவை கடந்தவை ஆகட்டும். இனி வரும் இளைய குமுகாயத்தை எழுச்சி பெறத் தூண்டுங்கள், நுங்கள் விதைக்கும் விதைகள் தமிழ நிலத்தில் புதிய பூக்களைப் பூத்துப் பொதுமைக் கனிகளைக் காய்த்துப் புரட்சி வெடிப்புகளை ஏற்படுத்தட்டும்.

மடத் தலைவர்கள் எல்லாரும் சேரி வரை போகின்ற காலமிது. சேரியிலே மதமென்னும் பேயைச் செந்தமிழர் நாட்டிலே உலவவிட-உயிர் கொடுக்கப் பணம் திரட்டிப் பள்ளிகள் அமைக்கின்றனர் அவர்களின் அந்த மத மயக்கத்திலேயே ஆழ்ந்து எதிர்கால இளம் தமிழன் வாழ்வை இருட்டாக்கிக் கொள்ளத்தான் வேண்டுமா? முன்னைவிட நம் இயக்கங்களில் பணம் படைத்தவர்கள், பணத்தைப் படைத்துக் கொண்டவர்கள் அதிகம். எனவே அவர்களை எல்லாம் சென்னைக்கு அழைத்து அல்லது அவர்களைத் தேடிச் சென்று பார்த்து ஒரு 'பகுத்தறிவுக் கல்வி நிலையம்' —அறக்கட்டளை ஏற்படுத்துங்கள்.

அதில் கையூட்டு ஊழல் இன்றி, ஒன்றியம், வட்டமெனப் பள்ளிகளை, கல்லூரிகளை வளர்க்கின்ற தலைமுறையில் எதிர்ப்புகளைத் தாக்கும் குத்தீட்டிகளை உருவாக்கும் பாசறைகளாக அமையுங்கள். அதில், பகுத்தறிவும், அறிவியல் வளர்ச்சி ஆர்வமும், தமிழ் மீது மாறாத பற்றும் கொண்ட ஆசிரியர்களை அமர்த்தித் தரமான எதிர்கால வாழ்வுக்கு ஏற்றம் தரும் கல்வியினைப் பயிற்றுங்கள்!

நம் இனத்துக் குழந்தைகள் ஆங்கிலப் பள்ளிகளில் சென்று கிறித்தவ(போதை)களில் ஆழுவதையும், ஆர். எசு. எசு. அமைத்த இந்து மதவெறியூட்டும் பார்ப்பனர் வலையில் வீழ்வதையும் நாம் அனுமதிக்கக் கூடாது. நாம் அமைக்கும் பள்ளியல் இளம் தமிழ் நாற்றங்காலில் இருந்து வெளிவரும் ஒவ்வோர் இளைஞனும் பகுத்தறிவு மிக்குடையோனாகவும். தமிழினப் பற்றுடையோனாகவும், எதிர்காலத் தமிழ் நாட்டை ஏற்றம் பெறச் செய்பவனாகவும் இருக்க வேண்டும். இன்றைய மாணவருலகம் எங்கே போகிறது? முன்னர் இந்தி வல்லாண்மையை எதிர்த்துப் போரிட்ட அந்த எழுச்சியினை இன்று எதிர்பார்க்க முடியுமா?

எனவே மாணவர்கள் பெரியார், அண்ணா, பாவேந்தர், மற்றும் பகுத்தறிவூட்டும் இக்காலத்து எழுச்சிமிக்க படைப்பிலக்கியங்களையும் பழந்தமிழர் வீரவரலாறுகளையும் உணரச் செய்ய வேண்டும். உணர்த்துகின்ற புதிய ஆசிரியர்களை—அந்த வைகறைச் சேவல்களை—நீங்கள் ஆய்வுகள் செய்து, அந்தப் புதிய பள்ளிகளை அமைக்கின்ற முடிவைத் தீர்வுகள் செய்து, நம்மினத் துயரங்களையும் ஏக்கங்களையும் மாற்றங்களையும் மாற்றங்கள் செய்யும் காட்சிகளில் உங்கள் பார்வைகள் திரும்பட்டும். புதிய விடியல்கள் உண்டாகப் புரட்சி வெடிப்புகள் ஏற்படட்டும். நாம் அமைக்கும் பள்ளிகளுக்குப் பணம் தர நம் இயக்கத்தில் பணம் படைத்தவர்கள் முன்வர வேண்டும். அவர்களை முன் வரவைக்கத் தாங்கள் முன் வரவேண்டும். எதிர்காலத் தமிழ்நாடு இருண்டு போகாமல் காப்பாற்றுங்கள்.

என்றும் உங்கள் அன்புள்ள,
ஒடவை தமிழ்வேந்தன்

— இதன் படிகள் அனுப்பப்பட்டன: —

தமிழினத் தலைவர்
கலைஞர் மு. கருணாநிதி
அவர்கள் சென்னை.

தமிழினக் காவலர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்
அவர்கள் சென்னை.

தமிழினத் தளபதி
கி. வீரமணி அவர்கள்
சென்னை.

தமிழ்திரு. (முன்னாள் ச. ம, உ.)
நா. காச்சிமுத்து அவர்கள்
தாளாளர் இளங்கோ
மணிமேகலை உயர்பள்ளி, தேவத்தூர்.

அவலூர்பேட்டை நகர உலகத் தமிழின முன்னேற்றக் கழகப் பொதுக் கூட்டம்

தென்னாற்காடு மாவட்டம் செஞ்சி வட்டம் அவலூர் பேட்டை நகர உ.த.மு.க செயலர் திரு. நெஞ்சிற்கினியன். பெரியவர் திரு. கூ.சா. இராமலிங்கனார் முதலிய அன்பர்களின் அரிய முயற்சியால் தி பி, 2014 சுறவம் 10 (23-1-83) அன்று அவலூர் பேட்டை சிவன் கோவில் திடலில் பொதுக் கூட்டம் நடைபெற்றது

மருத்துவர் சரவணன் ம. இ. அ இ., தலைமை ஏற்றார் திரு. தா நெஞ்சிற்கினியன் தொடக்கவுரையாற்றினார். திரு. கூ. சா இராமலிங்கனார் அனைவரையும் வரவேற்றார்.

திருக்குறள் பேரவைத் தலைவர் திரு. இராம. குப்பு ஐயா அவர்களும் திருவண்ணாமலைக் கலைக் கல்லூரிப் பேராசிரியர் இராசேந்திரன் க.மு அவர்களும் சிறப்புரையாற்றினர்.

தென்னார்க்காடு வடக்கு மாவட்டச் செயலர் திரு. விழுப்பரையன், மாவட்டப் பொருளர் திரு அ. நக்கீரன் வடஆர்க்காடு மாவட்டச் செயலர் திரு. உலக முதல்வன், தலைமைக் கழக அறிவியல் துறைச் செயலர் திரு. தமிழநம்பி ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டு கழகக் கொள்கைகளை விளக்கியும் உ. த. மு. க. வின் முயற்சிகளுக்குத் துணை நிற்கக் கோரியும் சொற்பொழிவாற்றினர்.

புலவர்கள் திருவாளன்மார் அப்பாசாமி புருடோத்தமன், நடராசன், முத்துக்கிருட்டிணன், திருவாட்டி காந்தாமணி மற்றும் திருவாளர்கள் தட்சிணாமூர்த்தி சிவ இராதாக் கிருட்டிணன், இராமநாதன், கார்த்திகேயன், கேசவன், சர்க்கரை சுவாமிநாதன் ஆகியோரும் கலந்துகொண்டு தமிழ்ப் புலவர்களையும வள்ளல்களையும் சிறப்பித்து உரையாற்றினர்.

பகல் 2 மணிக்குத் தொடங்கிய கூட்டம் இரவு 8½ மணியளவில் தமிழர் ஒற்றுமைப் பாடலுடன் இனிது முடிந்தது.

கூட்டத்தைக் கேட்ட பொது மக்கள் உ. த.மு க. வை வரவேற்றும், தமிழின ஒற்றுமைக்கு உ.த மு க. தான் வழிகோல முடியுமென்றும் பேசிச் சென்றதைக் கேட்க முடிந்தது.

ஒரு பதைப்பு மடல்!

தமிழர்கள் இந்தியை ஏற்க வேண்டுமா? என்ன இது புதுக்குழப்பம்?

1. திருமிகு. கலைஞர் கருணாநிதி அவர்கள்
தலைவர், திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை

2. மானமிகு. தளபதி. கி. வீரமணி க.மு.,ச.இ. அவர்கள்
பொதுச் செயலாளர்-திராவிடர் கழகம், சென்னை.

3. திருமிகு. பாவலரேறுபெருஞ்சித்திரனார் அவர்கள்
உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், சென்னை.

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய தமிழன்னையின் தலைப்புதல்வர்களே! இன, மொழி, மண் நலன் பேணும் தன்னிகரற்ற தலைவர்களே,

வணக்கம்.

இன்னும் 4 நாட்கள் கழித்து மொழிப் போரில் வீரமறைவு அடைந்த இணையற்ற தமிழ் மக்களுக்கு வீர வணக்கமும் புகழ்மாலையும், செலுத்தியுப் சூட்டியும் நினைவு கூர்ந்து, இந்தி எதிர்ப்பு உணர்வுகளை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள உள்ளோம்.

இவ்வேளையில் இந்த முறையான (Formal) செயல்களைத் தவறாது செய்து வந்து கொண்டிருந்தாலும், இன்று தமிழ் மக்களிடையே இந்தி எதிர்ப்பு உணர்வுகளைப் பொசுக்க மட்டுமன்ற. இந்தி ஆதரவை அவர்களிடையே ஏற்படுக்கவும் திட்டமிட்டும் விரிவாகவும், விரைவாகவும் சிலர் மிகமிகச் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளார்கள். இவர்களின் முயற்சிகளுக்கும்— இந்தியைத் தமிழர்களும் ஏற்றுக்கற்கவேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கும்— இந்து, இந்தியன் எக்சுபிரசு. தினமணி, துக்ளக், குமுதம் போன்ற ஏடுகள் பலவாறு உதவி வருகின்றன.

இந்த வரிசையில் இப்போது மிகவும் துணிச்சலாக வெளிப்படையாகவே சேலத்திலிருந்து வெளிவரும் ''சங்கொலி'' என்ற ஏடும் சேர்ந்துள்ளது. திரு. சோலை-இருசன் என்ற ''சனதா'' கட்சிக்காரர் நடத்தும் ஏடு இது. இதில் 20-1-1983 இதழில் 69—ஆம் பக்கம் வெளியாகியுள்ள ஓர் அரைப் பக்க விளம்பரத்தைத் தங்களின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

''இந்தியின் தேவை:

அனைத்திந்திய நிகழ்ச்சிகளுக்கு இந்தியை எவருமே புறக்கணிக்க முடியாது. சென்னை, திருச்சி பிற்பட்டோர் மாநாடுகளில், தி. க. கூட இந்தியிடம்தஞ்சப் புகுந்தது. வெளித்தொடர்புக்கென தொழிலதிபர்களுக்கு ஆங்கிலம் மட்டும் போதும். தொழிலாளர்களையும் பிற்பட்டோரையும் அனைத்து இந்திய அளவில் திரட்ட இந்தி தவிர்க்க முடியாத தேவை. வடபுலத்து 30 கோடி பிற்பட்டோரையும் வீரமணியும், கருணாநிதியும் ஆங்கிலம் பேசியா தட்டியெழுப்ப முடியும்? 'பாண்டித்யம்' பெற அல்ல. பரிச்சியம்' பெற. **தமிழக அரசே பள்ளிகளில் இந்தி போதனை வேண்டும்.** திராவிட கட்சிகளே தற்கொலைக் கொப்பான இந்தி எதிர்ப்பைக் கைவிடுவீர்.

இந்தி ஆதரவு இயக்கம்'

ஆம் வெளிப்படையாக, இயக்கமாகவே (!) வந்துவிட்டார்கள். இனியும்காலம் கடத்திக் கொண்டிருப்பதில் பயனேதுமில்லை. ''இந்தி ஒழிக தமிழ் வாழ்க'' என்று சிற்றூர்களில் எல்லாம் எழுதப்பட்டிருந்த 65 உணர்வு எங்கே? ஒப்புக்காக ''வீர வணக்க'' நாள் எடுத்துப் பயன் விளையாது. திட்டமிட்டுச் செயலில் இறங்குங்கள். மக்களிடையே இந்தியை ஏற்பதும், கற்பதும் மோசடித்தனமான செயல்கள் என மீண்டும் வலியுறுத்தப்பட வேண்டும். முகாமையான மாணவர்கள் இந்தி ஆதரவு இயக்கத்தின் செயல்களால் மயக்கப்பட்டு விடக்கூடாது.

இது துயரம் மிகுந்த நாளகள் என் போன்றோருக்கு! ஐரோப்பிய நாடுகளில மொழிப் பாடம் பற்றிய தகவல்களைத் திரட்டி வருகின்றன். பொதுவுடைமை நாடுகள் (அங்கேரி தவிர) ஒத்துழைக்க மறுக்கின்றன பொதுவாக எந்த நாட்டிலுமே எல்லா நிலைகளிலும் (Classes or standards) மூன்று மொழி வற்புறுத்தப்படவில்லை. இந்தியாவன மும்மொழித் திட்டம் ஏமாற்றுத் தனமானது.

அயர்லாந்தில் ஆங்கிலம் அயரிசு (Irish) மொழியை அழித்ததையும், உருசியாவில் இன்று உருசிய மொழி பிற மொழிகளை மட்டந்தட்டி மறைத்து வருவதையும் கவனத்தில் கொண்டு, நம் தொன்மைத்தாய்மொழியின் வாழ்வு, உறுதியான மறுமலர்ச்சி, ஏற்றம், வளர்ச்சி என்பவை இந்தியின் அல்லது ஆங்கிலத்தின் வல்லாளுமைக்கு நாம் உட்பட்டிருக்கும் வரை கிடைக்காது எனக் கூட கூறலாம்.

ஆனல் இக்காலம் இந்தியின் வல்லாண்மையைத் தடுப்பதிலும், அஃது ஆட்சி மொழியாக இருக்கும் நிலையில் இருந்து அகற்றப்படுவதிலும் நம் திட்டங்களும் செயற்பாடுகளும் இருக்கட்டும். அன்பு கூர்ந்து கவனமாக இருங்கள்

வாழ்க தமிழினம்! வளர்க அவரின விழிப்புணர்வும் எழுச்சியும்!

அன்புடன்,
வழக்குரைஞர்
ப. பத்மநாபன், க.மு,ச.இ.

''அண்ணா!''

''என்ன தம்பி?''

''குறளை என்றால் கோள் சொல்லுதல் என்று தானே பொருள்?''

''ஆமாம்''

''இந்தக் குறளைக்கும் குறளுக்கும் வேறுபாடு தெரியாமலோ அல்லது தெரிந்தும் வேண்டுமென்றோ, மார்கழி நோன்பின்போது திருக்குறளைக் கூடப்படிக்க மாட்டோம் என்று ஆண்டாள் பாடியிருப்பதாக ஒருமுறை சங்கராச்சாரியார் பேசிவிட்டாராமே!''

''ஆமாம்''

''அவர் பீடம் ஏற்ற பவள விழாவில் முன்னாள், இந்நாள் அமைச்சர்கள நடுவர்கள் முதலானோர் அவரைப்பற்றிப் பேசியிருப்பதைப் பார்த்தீர்களா?''

''பார்த்தேன். அவர் அருகில் இருந்தால் அன்னையின் அரவணைப்பில் இருப்பதுபோல் உள்ளது. அவரைப்பார்க்கும் போது ஆன்மா அடங்குகிறது. பெரும் புரட்சி செய்து வரும் துறவி இறைவனுக்கு நிகரானவர் என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள்''.

''இஃது என்ன வேடிக்கை! சமற்கிருதத்தையும் வருணசிரமத்தையும் காத்து வளர்ப்பதையே நோக்கமாகக்கொண்டவரை—அதிலும் திருக்குறளைத் தாழ்த்திப் பேசியவரை இப்படியா பாராட்டுவது?''

''எனக்குத் தெரியாது தம்பி!''

—தமிழவேள்

நன்றி!

எமக்கும் குடும்பத்திற்கும் கடந்த பொங்கல் நன்னாளில் வாழ்த்துகள் அனுப்பிய அன்புள்ளங்களுக்கு உளங்கனிந்த வாழ்த்துகளையும் நன்றியினையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர் 'தமிழ்நிலம்'

புதுப்'பா' என்பாரே!

கழுதையைக் குதிரை யென்பார்
காக்கையைக் குயிலே யென்பார்
பழுதையைப் பாம்பே யென்பார்
பல்லியைத் தேளே யென்பார்
கழுகினைக் கிளியே யென்பார்
காடையை மயிலே யென்பார்
எழுதிடும் உரைக ளெல்லாம்
எழில்புதுப் 'பா' வென் பாரே!

கிழவியைக் குமரியென்பார்
கிளிஞ்சலை முத்தே யென்பார்
புழுவினைப் பூத மென்பார்
பூனையைப் 'புலியே யென்பார்
அழுகையைச் சிரிப்பே யென்பார்
அவலத்தை மகிழ்வே யென்பார்
எழுதிடும் உரைக ளெல்லாம்
எழில்புதுப் 'பா' வென் பாரே!

உழுந்தினைத் துவரை யென்பார்
ஊமத்தையை முளரி யென்பார்
கொழுந்தினை மட்டை யென்பார்
கொடியினை மரமே யென்பார்
விழுமிய மரபுப் ''பா'' வை
வீணெனக் கதைப்பார்! இன்னோர்
எழுதிடும் உரைக ளெல்லாம்
எழில்புதுப் 'பா' வென் பாரே!

-க. அ. ஒளியவன்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவுஎண். TN/MS(C)/657

உ. த. மு. க.வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

அனுப்புதல்:
'தமிழ் நிலம்'
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்.
ஆண்டு கட்டணம் ரூ. 36/-
அரையாண்டு கட்டணம் ரூ. 18/-

பெறுநர். நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார், அச்சிடுவோர்: 'தென்மொழி' அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.